தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

துணர்: ரு சா

மலர்: உ

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவர் யாண்டு: உ௲௧௩, - துந்துபி வைகாசி
(1982 மே-ஜூன்)

MALLIKA ARTS
TJ

பொழிற்றொண்டர்:
வே. சுப்பிரமணியன்

தமிழ்ப் பொழில்

துணர்: ருசு] [மலர்: உ

உள்ளுறை:

		பக்கம்
1	கூடாவொழுக்கம் புலவர் பி. விருத்தாசலம், எம். ஏ., முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி.	... 49
2	வெண்பாப் பரிசுப் போட்டி	 64
3	புத்தரைப் புரிந்து கொள்வோம் மா. ரா. அரசு எம். ஏ., துணைப் பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி	... 66
4	திறனாய்வுக் கலை பேராசிரியர் சி. கோ. தெய்வநாயகம் கரந்தைப் புலவர் கல்லூரி. எம். ஏ., எம். ஃபில்	... 77
5	விடுக்கும் செய்தி பழ. த. சுப்பையன்	— 83
6	வரலாறு பற்றிய அறிக்கை இ. சு. முத்துசாமி, M A., Ph. D, B. G. L., B. T., தமிழ்த்துறைத் தலைவர், சேதுபதி அரசு கலைக்கல்லூரி., இராமநாதபுரம்	... 86
7	43-ஆம் ஆண்டு நிறைவு விழா கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க் கழகம்	 89
8	இலக்கிய இலக்கண வினா விடை	... 94

★ ★ ★

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ருகு	திருவள்ளுவர் யாண்டு உ௲கந துந்துபி—வைகாசி 1982 மே—சூன்	மலர் உ

தமிழ் வாழ்க

★ கூடா வொழுக்கம் ★

புலவர் பி. விருத்தாசலம், எம். ஏ.,

[1]

துறவறவியலில் அருளுடைமை, புலால் மறுத்தல், தவம் என்னும் மூன்று அதிகாரங்களுக்கும் அடுத்தாற்போல் நான்காவது அதிகாரமாக விளங்குகின்ற ,,கூடா வொழுக்கம்,, என்னும் அதிகாரத்தில் முதற்குறளாக அமைந் திருப்பது

''வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்''

என்பதாகும்.

''ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை''

என்பதனை மதுரைக் கூடலூர் கிழார் போன்ற தமிழ்நாட்டுச் சான்றோர் பலரும் இடையறாது எடுத்துரைத்து வந்துள்ளனர்.

''தீதும் நன்றும் பிறர்தர வாரா'' என்பது புறநானூற்றுப் புலவர் பெருமகனாகிய கணியன் பூங்குன்றனாரது பொன்மொழி யாகும். மக்களுக்கு ஒழுக்கமே உயர்வைக் கொடுக்கும். ஆத லால் மக்கள் அவ்வொழுக்கத்தைத் தம் உயிரினும் மேலாகக் கருதிப் பாதுகாக்க வேண்டும் என்பதனைத் திருவள்ளுவர்

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்''

என்று இல்லறவியலிலும் எடுத்துரைப்பார்.

''எல்லா வுயிரும் இன்புற் றிருப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே''

என்று தாயுமானவரைப் போன்ற சான்றோர் கண்ட கனவு நனவாக வேண்டுமானால் மக்கள் அனைவரும் தத்தமக்குரிய கடமைகளை முறையாகச் செய்து ஒழுக்கமுடன் வாழ வேண்டும். ஒழுக்கம் இல்லையேல் மக்கள் வாழ்வில் அமைதியும் இன்பமும் அழிந்து போகும். இல்லறத்திலும் துறவறத்திலும் ஈடுபட்டவர்களுக்கு உரிய ஒழுக்கங்களாக வள்ளுவர் கூறுவனவற்றை இன்றைய நடைமுறை உலக வாழ்வுக்கு ஏற்ற வகையில் தனி வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் ஈடுபட்டவர்களுக்கு உரிய ஒழுக்கங்களாகக் கொள்ளலாம்.

''பிறர் நம்மிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோமோ அப்படியே நாமும் மற்றவர்களிடம் நடந்து கொள்வதே ஒழுக்கமாகும்'' என்று தந்தை பெரியார் அவர்கள் கூறுவார்கள். இல்லறத்தில் ஈடுபட்டவர்களுக்கு இந்த ஒழுக்கம் போதும். துறவறத்தில் ஈடுபட்டவர்களுக்கு இதனினும் மேம்பட்ட ஒழுக்கம் வேண்டும். ''மற்றவர்கள் நமக்குத் தீங்கிழைத்த போதும் — மற்றவர்கள் நமக்கு மானக்கேடு உண்டாகுமாறு நடந்து கொண்டபோதும் நாம் மற்றவர்களுக்கு நன்மையே செய்ய வேண்டும்'' என்பதுதான் பொதுத்தொண்டில் ஈடுபட்டவர்களுக்குப் பெரியார் கூறிய அறிவுரையாகும். மிகச் சிறந்த துறவியாக வாழ்ந்த நாவுக்கரசர் பெருமான்

''என் கடன் பணிசெய்து கிடப்பதே''

என்று சொல்லி மக்களுக்குத் தொண்டுசெய்து வாழ்ந்தவர் ஆவர். இன்றைக்கு ஊருக்கும் நாட்டுக்கும் உலகுக்கும் தொண்டு செய்வதாகச் சொல்லிக் கொண்டு பொதுத் தொண்டில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் உண்மையிலேயே நாவுக்கரசர் பெருமானைப் போன்ற துறவிகளாக வாழவேண்டும்.

இல்லறம் என்பது ஒரு சிறிய வட்டம்; துறவறம் என்பது ஒரு பெரிய வட்டம். கிணறுகளும் ஊற்றுக்களும் சிலருக்கு மட்டுமே நீர் வழங்குவதுபோல இல்லறம் என்னும் சிறிய வட்டத்தில் வாழ்வோர் தம்முடைய மனைவியும் மக்களும் உற்றார் உறவினர்களும் ஆகிய சிலருக்கு மட்டுமே பயன்படக் கூடியவர் ஆவர்.

ஆடி மாதத்தில் பெருக்கெடுத்து ஓடிவரும் பொன்னியாற்றுப் புது வெள்ளம் பல நூறாயிரம் மக்களுக்கு நீர் வழங்குவதுபோலத் துற வறம் என்னும் பெரிய வட்டத்தில் வாழ்வோர் உலக மக்கள் அனைவருக்கும் பயன்படக் கூடியவர்கள் ஆவர்.

தாமும் தம்முடைய மனைவி மக்களும் மட்டுமே வாழ்வதற்குப் பாடுபடும் இல்லறத்தார்களைப் பற்றிப் பாடவந்த பாவேந்தர் பாரதிதாசன்

''தன்பெண்டு தன்பிள்ளை சோறுவீடு
சம்பாத்தியம் இவையுண்டு தானுண்டு என்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்''

என்று குறிப்பிடுவார். பாவேந்தர் அவர்களே ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்னும் மனப் பாங்குடையவர்களாய் உலக மக்கள் அனைவரும் நன்றாக வாழவேண்டும் என்று கருதி உண்மையான பொதுத் தொண்டில் ஈடுபட்டுள்ள சான்றோர் களைப் பற்றிக் கூறும்போது

''தூயவுள்ளம் அன்புள்ளம் தொல்லுலக மக்களெல்லாம்
ஒன்றேயென்னும்
தாயுள்ளம்'' உடையவர்கள் எனக் குறிப்பிடுவார்.

ஒரு மனிதன் தன்னலத்துடன் செயல்பட்டு வெற்றியடையும் போது அவனுக்குக் கிடைக்கின்ற இன்பம் சிறு இன்பம் ஆகும். ஒருவன் தன் மனைவியால் துய்க்கின்ற இன்பமும் சிற்றின்பம் என்று கூறப்பெறும். அதே நேரத்தில் தனக்குரிய பொருள் ஒன்றைப் பிறர்க்கு ஈவதால் வரும் இன்பம்-ஈத்துவக்கும் இன்பம் பேரின்பம் ஆகும். உலக வாழ்வதற்காகத் தமக்குரிய எல்லா வற்றையும் தியாகம் செய்வதால் வரும் இன்பம் நிலையான மிகப் பேரின்பமாகும். ஆகவே, பொதுத்தொண்டு செய்வதற் காகத் தனக்குரிய மனைவி மக்களைத் துறந்து துறவியான ஒருவன் பிறர்க்குரிய மகளிர்பால் இன்பம் துய்க்கக் கருதுவது அறிவற்ற கொடிய பாவச் செயலாகும் வஞ்சகம் நிரம்பிய நெஞ்சினராகிய போலித் துறவிகள் உலகத்தார்க்குத் தெரியாமல் காம இன்பம் துய்க்கும் ஒழுக்கக் கேடான செயலைக் கண்டு அவர்களுடைய உடம்பாக அமைந்துள்ள ஐம்பெரும் பூதங்களும் வேதனையால் தமக்குள்ளே சிரிக்குமாம்.

தம்மிடத்தே பூத்த மலர்களைத் தொடுத்து மாலையாக்கி மங்கையர் சூடிக் கொள்ளும்போது அதனைப் பார்த்துச் சோலை

கள் சிரிக்குமாம். மக்கள் தம்முடைய மலர்களைப் பறித்து மலக் குழியை மூடுவதற்குப் பயன்படுத்தினால் அதனைக் கண்டு சோலைகள் கோவென்று கதறிக் கதறி அழுமாம்.

''மலம் மூடத்தான் மலர்ப்பறித்தேன் எனில்
குளிர்மலர்ச் சோலை கோவென் றழாதோ''

என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடுவார். அதுபோல் தம்மால் உருவான உடம்பில் உள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளாலும் உலகத்தார்க்குத் தெரியாமல், போலித்துறவி தீச்செயல் செய்வதைப் பார்க்கும்போது

''இவன் தீச்செயல் செய்வதற்கு
நாம் உடம்பாய் அமைந்தோமே''

என்று வருந்தி அவனுக்கு உடம்பாய் அமைந்த ஐந்து பூதங் களும் அவனுக்கும் தெரியாமல் அகத்தே நகுமாம். ஆகவே, பிறர்க்குத் தெரியாமல் சாமர்த்தியமாகச் செய்வதாகக் கருதிக் கூடாவொழுக்கத்தை மேற்கொள்ள வேண்டா என்று போலித் துறவிகளுக்குத் திருவள்ளுவர் அறிவுறுத்துகின்றார்.

* * *

[2]

கூடாவொழுக்கம் என்னும் அதிகாரத்தில் இரண்டாவது குற ளாக அமைந்திருப்பது

"வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றம் படின்"

என்னும் பாடலாகும். இது நெருப்பு — இதைத் தொட்டால் சுடும் என்று நன்றாகத் தெரிந்தவர்கள் தொட்டாலும் நெருப்புச் சுடும். தம்முடைய அறியாமையால் இது பவழம் என்று தவ றாகக் கருதித் தொட்டாலும் நெருப்புச் சுடும். அதுபோல் தெரிந்து செய்தாலும் தெரியாமற் செய்தாலும் தவறு செய்தவர் கள் தாம் செய்த தவற்றுக்கு ஏற்ற தண்டனையை அடைந்தே தீர வேண்டும் ஆனாலும் தெரிந்து செய்கிற தவற்றுக்கும் தெரியாமற் செய்கிற தவற்றுக்கும் தரப்படுகின்ற தண்டனையில் வேறுபாடுண்டு. முன்கூட்டியே திட்டமிட்டுச் சதி செய்து ஒரு கொலையைச் செய்தால் அதற்குத் தூக்குத் தண்டனையும்,

எதிர்பாராத நெருக்கடிகளுக்கு ஆளாகித் திடீரென்று உணர்ச்சி வசப்பட்டுக் கொலை செய்தால் அதற்கு ஆயுள் தண்டனையும் வழங்கப்படுவதை நாம் பார்க்கிறோம்.

ஆகவே, இது தவறுதான் என்பதைத் தெளிவாகப் படித்தறிந்து உணர்ந்திருந்தும் — அதனைப் பலமுறையும் தெளிவாகப் பலர்க்கும் எடுத்துரைத்திருந்தும் தான் புலனடக்கமின்றித் தவறு செய்வோனை

''ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையா ரில்''

என்று பிறிதோரிடத்திலும் வள்ளுவர் கண்டித்துக் கூறுவார்.

இல்லறத்தில் ஈடுபட்டவர் தவறு செய்தால் அவரது குடும்பம் மட்டுமே கேடு அடையும். உலகத்துக்குத் தொண்டு செய்யும் துறவிகள் தவறு செய்தால் உலகத்துக்கே கேடுண்டாகும். இல்லறத்தான் தவறு செய்வது தரையில் நிற்பவன் கீழே விழுவது போன்றதாகும். ,,குணமென்னும் குன்றேறி நிற்பவனாகிய துறவி தவறு செய்வது மலைமீது நிற்பவன் கீழே விழுவது போன்றதாகும்.,, எனவே, இல்லறத்தான் தவறு செய்தாலும் — துறவிகளும் பொதுத் தொண்டில் ஈடுபட்டவர்களும் தவறு செய்யவே கூடாது.

போலித் துறவிகள் பலர் அருட்செல்வர்களாகிய உண்மைத் துறவிகளின் தவ வாழ்க்கைக்கு அடையாளச் சின்னம் ஆகிய தவ வேடத்தை அணிந்து கொண்டு பிறவுயிர்களுக்குத் தீங்குகளைச் செய்கின்றார்கள்.

அணிந்து கொள்ளும் ஆடை அணிகலன்களுக்கும் பொறுப்பேற்றுள்ள பதவிக்கும் என்று சில தனிச்சிறப்புகள் உண்டு. உடல் வலி குன்றிய ஒருவன்கூடப் படைமறவர்களுக்குரிய ஆடைகளை அணியும்போது ஒரு புதிய தோற்றத்தையும் ஆற்றலையும் பெறுகிறான். கையிலே காசுபணம் இல்லாதபோது சோர்ந்து நடக்கின்ற ஒருவனே கையில் கொஞ்சம் காசுபணம் வந்து விட்டால் அதற்கென்று மிடுக்கான தனிநடை நடப்பதைப் பார்க்கிறோம்.

ஆகவே, பலராலும் மதிக்கப்படும் தவவேடந் தாங்கிய துறவிகள் தம்முடைய வேடத்தை நினைந்தாவது ஒழுங்காக நடந்து

கொள்ள வேண்டும். அவ்வாறு நடந்து கொள்ளாவிட்டால் உயர்ந்த தவ வேடத்தால் ஒரு பயனுமில்லை.

ஆயிர மாயிரம் சதுர மைல்களுக்கு நீர் நிரம்பி இருந்தாலும் கடல் நீரை யாரும் குடிக்கமாட்டார்கள்

"தெண்ணீர்ப் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல்
உண்ணார் ஆகுப நீர்வேட் டோரே"

என்பது புறநானூறு.

துறவியர்க்குரிய தவவேடம் வானைப் போலவும் கடலைப் போலவும் மதிக்கத்தக்கதுதான். ஆயினும், துறவிகள் நெஞ்சில் தன்னலமும் காமமும் புகுமானால் அவர்களால் உலகத்துக்குப் பெருங்கேடு உண்டாகும். குளத்து நீரையும் ஆற்று நீரையும் பாய்ச்சும்போது செழிப்பாக வளர்கின்ற நெற்பயிர் கடல்நீரைப் பாய்ச்சும்போது கெட்டுப் போவதுபோலப் போலித் துறவிகளைச் சென்று வணங்கியோர் வாழ்க்கை பாழாகிவிடும்.

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்"

என்பது பாரதி வாக்கு.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்"

என்பதற்கு ஏற்பத் தூய எண்ணங்கள் யாருடைய நெஞ்சில் நிறைந்துள்ளனவோ அவர்களுடைய முகத்தில் ஒரு புதுப்பொலிவு தோன்றும்.

"பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்
கேட்கா வரத்தைக் கேட்கநான் துணிந்தேன்
மண்மீ துள்ள மக்கள் பறவைகள்
விலங்குகள் பூச்சிகள் புல்பூண்டு மரங்கள்
யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே
இன்பமுற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திடவே
செய்தல் வேண்டும் தேவ தேவா"

என்று பாரதியார் இறைவனிடம் வேண்டுகிறார். பாரதிக்கு இருந்த தூய நெஞ்சம் துறவிகளுக்கு இருக்குமானால் — அழகினுக்கு அழகு செய்வது போலவும் — பொன்னாற் செய்த பூ நறுமணம் பெற்றது போலவும் — இயல்பாகவே பலராலும் மதிக்கப்படும் தவவேடத்துடன் தூய எண்ணங்களால் முகத்தில்

தோன்றும் புதுப்பொலிவும் ஒன்று சேர்ந்து தூய துறவியர்பால் மக்களுக்கு மிகுந்த ஈடுபாடு தோன்றும்.

இது குற்றம் எனத் தன் நெஞ்சம் தெளிவாக உணர்ந்தவொரு தீச்செயலைச் செய்யும் போலித் துறவியின் முகத்தில் அருள் விளக்கம் தோன்றாது — மருளும் வஞ்சமும் மயங்கிக் கிடக்கும். தன்னல வேட்கையும் காமமும் ஆகிய பசி நிறைந்த கண்களோடு விளங்கும் போலித்துறவியின் முகத்துக்கும் அவன் கொண்ட தவ வேடத்துக்கும் பொருத்தம் இல்லாமற் போய்விடும்.

வான்போல் உயர்ந்த தவவேட மிருந்தும் மக்களால் மதிக்கப்படாத நிலை போலித் துறவியர்க்கு உண்டாகும். எனவே, தாம் புனைந்துள்ள தவவேடத்தை நினைந்தாவது துறவியர் தமக்குரிய ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று திருவள்ளுவர் வலியுறுத்திக் கூறுகின்றார்.

* * *

[3]

புறப்பகையை வெல்வது எளிது. காமம், வெகுளி முதலிய அகப்பகையை வெல்வது அரிது. தன்னுடைய படைமறவர்களுக்கு ஒழுங்காகப் பயிற்சி கொடுத்துத் தன்னுடைய கட்டளையைத் தப்பாமல் செயற்படுத்துமாறு செய்யவல்ல படைத்தலைவனே பகைவர்களை வெல்ல முடியும். அதுபோல ஒருவன் தன்னுடைய மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐம்பொறிகளுக்கும் முறையாகப் பயிற்சி கொடுத்து நல்லனவற்றைச் செய்யவே அவை பயன்படும் வகையில் தம்முடைய அறிவானும் உறுதியானும் அவற்றை அடக்கி ஆள்பவர்களே துறவிகளாகித் தொண்டு செய்ய முடியும். உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காக்கவல்ல மனவலிமை உடைய துறவிகளது தோற்றமே இக்குறளில் வல்லுருவம் என்று குறிக்கப் பெறுகிறது.

ஐம்பொறிகளையும் அடக்கும் வலிமையில்லாத ஒருவன் மனவலிமை உடைய துறவிகளுக்குரிய வேடம் புனைந்து தன்னை

நம்பிய மக்களுடைய நல்வாழ்வைக் கெடுக்கின்ற செயல் பசு ஒன்று புலித்தோல் போர்த்துப் பயிர்களை மேய்ந்து பாழ்படுத்து கின்ற செயலை ஒக்கும். பசு பசும்புல்லைத் தின்னும் இயல்புடை யது. அத்தகைய பசு தனக்குரிய பசும்புல்லைத் தின்னாது மனிதர்களுக்குரிய உணவுப் பொருளைத் தரும் பயிர்களைத் தின்னும் ஆசை கொள்வது தகாத செயலாகும். தன்னுடைய தகாத செயலை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பசு புலித் தோலைப் போர்த்துக் கொண்டு தோட்டத்தினுள் புகுந்து பயிர் களை மேயும்போது அதனைக் காணும் உழவன், புலி பயிரைத் தின்னாது என்னும் நம்பிக்கை காரணமாகவும், அருகில் சென் றால் புலி தன்னைக் கொன்றுவிடலாம் என்னும் அச்சம் காரண மாகவும், அப்புலித்தோல் போர்த்திய பசுவை தோட்டத்தை விட்டுத் துரத்தாமல் விட்டு விடுகின்றான். அதுகாரணமாக மக்களுக்குரிய உணவினை நல்கும் பைங்கூழ் எல்லாம் பாழாகி உலகிற்குக் கேடு விளைகிறது.

பசு தன்னை விட்டுவிட்டுப் பயிரைத் தின்ற காரணத்தால் புல் பயனின்றி வளர்ந்து பாம்புகளும் பூச்சிகளும் மறைந்து வாழ்வதற் குரிய இடமாக மாறி விடுகிறது. அதனால் பசும்புல்லும், உணவை விளைவிக்கும் பைங்கூழும் ஆகிய இரண்டும் பாழா கின்றன, மக்களுக்கும் உணவின்றி மடிகின்றனர். பைங்கூழை மேயும் பசுவும் தோட்டக்காரன் உண்மையைக் கண்டு பிடித்து விடுவானோ என்னும் அச்சம் காரணமாக வயிறார இரையுண்ண முடியாமல் அறைகுறையாக இரையுண்டு அல்லல் படுகின்றது.

அதனைப் போலவே இல்லறத்திலிருந்து இன்பம் துய்த்துத் தன் மனைவிக்கும், மக்களுக்குமுரிய கடமைகளை முறையே செய்து வரும் இல்லறத்தான் ஒருவன் தன்னால் பாதுகாக்கப் பெற வேண்டிய மனைவி மக்களைத் தவிக்குமாறு விட்டு விட்டுப் பற் றெல்லாம் துறந்த தவமுனிவர்போல் வேடம் புனைந்து பிறர்க் குரிய மகளிரை விரும்பிக் கேடுசெய்வது மன்னிக்க முடியாத பெருங் குற்றமாகும். அதனால் போலித்துறவி தன்னுடைய மனைவி, மக்களையும் தவிக்க விட்டுவிட்டுத் தானும் முழுமை யாக இன்பம் துய்க்க முடியாமல் இடர்ப்படுவதோடு தன்னை நம்பிய பிறரையும் துன்புறச் செய்கின்றான். இது மிகவும் அடாத செயலாகும்.

எனவே ஒவ்வொருவரும் தம்முடைய அறிவுக்கும், ஆற்ற லுக்கும் ஒத்து வராத செயல்களைச் செய்ய முற்பட்டுத் தாமும் துன்புற்றுப் பிறரையும் துன்புறுத்துவது வேண்டாத செயலாகும் என்னும் கருத்தே

''வலியில் நிலைமையான் வல்லுருவம்
புலியின்றோல் போர்த்து மேய்ந்தற்று''

என்னும் குறளால் அறியப்படுகின்றது.

மேலும் இக்குறளில் மனவலிமை என்று குறிக்கப் பெறுவது ஐம் பொறிகளையும் அடக்கி ஆள்வதை மட்டுமன்று. தன்னலத்தைத் துறந்து பொதுத்தொண்டு செய்வதற்காக வந்தவர்கள் மற்றவர் கூறும் பழிச்சொல்லைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். பொல்லாத பழிகளைத் தம்மேல் சுமத்துகிறார்களே, அதனால் தம்முடைய மானம் போய்விட்டதே, தம்முடைய புகழ் குறைந்து விட்டதே என்று மனவருத்தம் அடையக் கூடாது. பொதுத் தொண்டு செய்ய வந்தபின் சொந்த மான அவமானங்களை நினைத்து யாரேனும் கவலைப் படுவார்களானால் அவர்கள் உண்மையில் பொதுத்தொண்டு செய்ய வந்தவர்கள் அல்லர். பொதுத் தொண்டைத் தன்னலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள முயல்கின்றவரே ஆவர். எனவே, தாமும் தம்முடைய மனைவி மக்களும் உற்றார் உறவினர்களுமாகிய சிலரை மட்டும் வாழ வைக்கப் பாடுபடும் இல்லறத்தைத் துறந்து, பல நூறாயிரம் மக்களை வாழ வைக்கின்ற பொதுத்தொண்டில் ஈடுபட்டுப் பலராலும் மதிக்கப்படும் உயர்ந்த பதவிகளில் வீற்றிருப்போர் தாம் இன்புற நினைப்பதை முற்றிலும் மறந்து — சொந்த விருப்பு வெறுப்புகளுக்குச் சிறிதும் இடங்கொடுக்காமல்—பிறர் கூறும் பழிச் சொல்லைக் கேட்டு வெகுளி கொள்ளாமல் — மனவுறுதியோடு இருந்து தம்முடைய பதவிக்குப் பெரியதொரு மதிப்பை ஏற்படுத்தித் தர வேண்டும். அப்படியில்லாமல் பெரிய பதவிகளில் இருந்து கொண்டு தகுதியுடையார் பலரும் மனம் புழுங்கி வாடுமாறு விட்டுவிட்டு — முறையற்ற வழிகளில் தகுதியில்லாதவர்களாகிய தம்முடைய உற்றார் உறவினர்களுக்குப் பெரிய பதவிகளைத் தந்து நலஞ்செய்ய முயல்வது இழிவானதாகும். இத்தகைய உயர்ந்த பதவியில் இருப்போர் தவறுகளைச் செய்ய மாட்டார்கள் — பொதுநலத்தை மறந்து தன்னலத்தைக் கருத மாட்டார்கள் என்று பொதுமக்கள் நம்புவதைப் பயன்படுத்திக் கொண்டு பெரிய பதவியிலிருப்போர் தன்னலத்தோடு செயல்படுவது ஆற்றல் குறைந்த பசு, ஆற்றல் மிகுந்த புலித்தோலைப் போர்த்துக் கொண்டு பயிர்களை மேய்ந்து பாழ்படுத்திய கொடுஞ் செயலை ஒக்கும் என்னும் கருத்து

"வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்து மேய்ந்தற்று''

என்னும் இக்குறளால் நன்கு விளக்கம் அடைகின்றது.

* * *

[4]

"தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று"

என்னும் திருக்குறள் அன்பு வடிவாக விளங்கும் துறவிகளின் வேடத்தில் மறைந்துகொண்டு தம்மைமிக உயர்வாக மதித்துப் போற்றித் தம்மைப் புகலிடமாகக் கொண்டு சார்ந்த மக்களுக்குப் பொல்லாங்கு செய்யும் போலித் துறவிகளின் வஞ்சகச் செயலை ஓர் அருமையான உவமை வாயிலாக விளக்கிக் காட்டுகிறது,

இரைதேடச் சென்ற பறவைகள் பொழுதுபோன வேளையில் தமக்குப் புகலிடமாகிய முட்புதர்களிலே சென்று தங்கியிருக்கும் இயல்புடையவை. பறவைகளைப் பிடிக்க வேண்டும் என்னும் கொடிய எண்ணமுடைய வேட்டுவன்-தான் எல்லார்க்கும் தெரியுமாறு வெளிப்படையாக நின்று வேட்டையாட முயன்றால் தனது நோக்கம் நிறைவேறாது என்று கருதிப் பறவைகள் புகலிடமாக வந்தடையும் முட்புதர்களிலே பதுங்கியிருந்து வலைவிரித்து அப் பறவைகளைப் பிடிப்பதுண்டு அதுபோலப் போலித் துறவிகள் தவவேடத்தில் மறைந்து கொண்டு தம்மை நம்பி வரும் மக்களுக்குப் பெருந்தீங்கு செய்கின்றார்கள்.

மதுரை மாநகரத்தில் கவுந்தியடிகள் கோவலன் கண்ணகி ஆகிய இருவரையும் மாதரி என்னும் இடைக்குல மடந்தையிடம் அடைக்கலப் பொருளாக ஒப்படைத்தார். மாதரியும் கவுந்தியடிகள் சொன்னது போலவே தாய் போலிருந்து கண்ணகியையும் கோவலனையும் அன்புடன் விருந்தோம்பினாள் ஆயினும், பாண்டிய மன்னனால் கோவலன் கொல்லப்பட்டான் என்பது தெரிந்தவுடனேயே ஆயர்முதுமகளாகிய மாதரி தன்னிடம் அடைக்கலமாக ஒப்படைக்கப்பட்ட பொருளைப் பாதுகாக்க முடியாமல் போயிற்றே என்று மனம் நொந்து நள்ளிருள் யாமத்தில் தீ வளர்த்து அத்தீயில் பாய்ந்து இறந்து போனாள் என்பதைச் சிலப்பதிகாரம் நமக்குத் தெரிவிக்கிறது.

தன்னிடம் அடைக்கலமாக ஒப்படைக்கப்பட்ட பொருள்களைப் பாதுகாக்க முடியாத அவலநிலை வந்துற்றபோது இல்லறத்தாளாகிய மாதரியும் தன்னுடைய உயிர் நீத்துப் புகழ்கொண்ட பண்பாடு மிக்க தமிழ்நாட்டில் தம்மை மிக உயர்வாக மதித்துத் தம்மிடம் அடைக்கலமாக வந்து சேர்ந்த மனிதர்களை வஞ்சனையால் ஏமாற்றிக் கெடுக்கும் போலித் துறவிகளின் கூடாவொழுக்கம் மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாகும்.

பெற்ற தாய் தன்னுடைய குழந்தையைத் தானே கொல்வது எவ்வளவு கொடிய குற்றமோ—கோயிலில் பூசை செய்யும் அர்ச்சகரே கோயில் சிலையைத் திருடி விற்பது எவ்வளவு கொடிய குற்றமோ அவ்வளவு கொடிய குற்றம் போலித் துறவிகள் தம்மிடம் அடைக்கலமாக வந்து சேர்ந்தவர்களுக்குத் தீங்கிழைப்பதாகும்.

எந்த நாட்டில் பிறருடைய நல்வாழ்வுக்காகத் தங்களையே தியாகம் செய்யும் தியாகிகள் ஏராளமாக வாழ்கிறார்களோ அந்த நாடுதான் நல்ல நாடாக விளங்க முடியும்.

"நாடாகு ஒன்றோ காடாகு ஒன்றோ
அவலாகு ஒன்றோ மிசையாகு ஒன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என்று ஔவையார் பாடிய புறநானூற்றுப் பாடலும் ஏறத்தாழ இதே கருத்தை எதிரொலிப்பதாகும். "உலகத்தில் உள்ள மக்கள் அனைவரும் தவறு செய்தாலும் நான் தவறு செய்ய மாட்டேன்" என்று உறுதி கொண்ட, நெஞ்சுடைய. சான்றோர்கள் எண்ணிக்கை ஒரு நாட்டில் நாடோறும் வளர வேண்டும்.

கல்வி அறிவாலும், தவத்தாலும், ஒழுக்கத்தாலும் மேம்பட்டு விளங்கும் உண்மைத் துறவிகள் மிகப் பெரிய தியாகிகள் ஆவர். அத்தகைய துறவிகளை வழிகாட்டிகளாகக் கொண்ட நாட்டில் தான் நல்ல ஆடவர்களும் சான்றாண்மையாகிய கடலுக்குக் கரை போன்றவர்களாகிய உயர்ந்த சான்றோர்களும் தோன்ற முடியும். அருள் வாழ்க்கையை மேற்கொண்ட துறவிகளே தம் நிலையிலிருந்து தாழ்ந்து வஞ்சகமான வாழ்க்கை வாழத் தொடங்குவார்களானால் — வெள்ளை உள்ளம் படைத்த அப்பாவி மக்களை ஏமாற்றித் தீங்கிழைப்பார்களேயானால் — அப்புறம் அந்த ஏழை மக்களை யார்தான் காப்பாற்ற முடியும்? புதரிலே மறைந்திருந்த வேட்டுவன் விரித்த வலையில் சிக்கிய

பறவைகளைப் போல் அந்த ஏழை மக்கள் அழிந்தொழிய வேண்டியதுதான் என்பதை மிக உருக்கமாக எடுத்துரைக்கும் பாடலே,

"தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று"

என்னும் திருக்குறள் ஆகும்.

நம்பிக்கை மோசடி செய்வது என்பது மிகப் பெரிய குற்றங்களில் ஒன்றாகும். பொதுத்தொண்டு செய்ய வந்தவர்களும், பெரிய பதவிகளில் அமர்ந்திருப்போரும், தம்மை நம்பிய மக்களுடைய நம்பிக்கை பழுதாகாமல் நடந்துகொள்ள வேண்டும் என்னும் கருத்து இதனால் வலியுறுத்தப் படுகிறது.

* * *

[5]

பற்றற்ற துறவிகள் என்று தம்மைச் சொல்லிக் கொண்டு அத னால் பிறரை நம்புமாறு செய்து ஏமாற்றித் தீங்கிழைக்கும் போலித்துறவிகளின் வஞ்சகமான பொய்யொழுக்கம் அவர்க ளுக்குத் தொடக்கத்தில் இன்பம் தருவது போலத் தோன்றி னாலும் இறுதியில் 'எத்தகைய குற்றத்தைச் செய்துவிட்டோம்' என்று தாமே எண்ணி எண்ணி இரங்கிடும் வகையில் அவர்க ளுக்குப் பல்வேறு துன்பங்களையும் கொடுத்தே தீரும் என்பதைத் திருவள்ளுவர் வலியுறுத்திக் கூறும் குறட்பாவே

"பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற் [றென்று
ஏதம் பலவும் தரும்"

என்னும் பாடலாகும்.

சிலரைப் பலநாள் ஏமாற்றலாம்; பலரைச் சிலநாள் ஏமாற்ற லாம். ஆனால் எல்லாரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடி யாது என்பது நாம் அனுபவத்திற் கண்டறிந்த உண்மையாகும். 'கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளில் தெரியும்' என்பது பழமொழி எனவே, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோராகிய போலித்துறவிகளின் தீயவொழுக்கம் பாதிக்கப்பட்டோர் அனை

வருக்கும் விரைவில் தெரிந்து போகும். அவ்வாறு உண்மை வெளிப்படுங்கால் போலித் துறவியர் எத்தகைய கொடிய மனக் கேட்டிற்கும் துன்பத்திற்கும் ஆளாவர் என்பதை அளவிட்டுச் சொல்ல இயலாது. 'தன்வினை தன்னைச் சுடும்' என்பதற்கு ஏற்பவும், 'கத்தி எடுத்தவன் கத்தியாலேயே அழிவான்' என்ப தற்கு ஏற்பவும் தாம் செய்த தவறுகளே தமக்குப் பகையாகித் துன்பம் செய்வதை ஒருநாள் இல்லாவிட்டாலும் மறுநாள் போலித் துறவிகள் உறுதியாகத் தெரிந்து கொள்வார்கள். அந்தோ! அந்த நாளில் அவர்களைக் காப்பாற்ற யாரும் முன் வர மாட்டார்கள்.

பெரியவர்கள் பெரியவர்களாக நடந்து கொள்ளாமல் சின்ன மனிதர்களாக நடந்து கொள்ளும் காரணத்தால்தான் சின்ன மனிதர்கள் பெரிய மனிதர்களாக நாட்டில் நடமாடுகின்றார்கள். இன்று உலகில் காணப்படும் பல்வேறு தவறுகளுக்கும் துன்ப துயரங்களுக்கும் இதுதான் காரணம். ''இந்தப் பதவியில் இருப்பவர் இந்தத் தவற்றைச் செய்துவிட்டார். அதனால் இன் னின்னவாறு தீங்குகள் விளைந்துவிட்டன'' என்று ஒருவரைப் பற்றி அவருக்கும் மேற்பதவியில் உள்ளவரிடம் ஒருவர் முறையிடு கின்றார் என்று வைத்துக் கொண்டால் ''நாம் செய்யாத எந்தத் தவற்றை நம் கீழ் வேலை செய்யும் இவர் செய்து விட்டார்'' என்று அவருடைய மேலதிகாரி நினைக்கும் நிலையே நாட்டில் வளர்ந்து வருகிறது. தவறுகளை ஏராளமாகச் செய்துவரும் ஒரு மேலதிகாரிக்குத் தன்கீழ் இருப்போர் தவறு செய்வதைத் தட்டிக் கேட்கும் ஆன்ம பலம் இல்லாமற் போய்விடுகிறது.

ஆகவேதான்—தன்னலந் துறந்த தியாகிகளாய் பிறர்க்கு எடுத்துக்காட்டாய் வாழ வேண்டிய துறவிகள் தவறு செய்தால் வழிகாட்டுவோர் இல்லாமல் மக்கள் அனைவரும் தடுமாறு கின்றனர்.

வானத்திலிருந்து உப்பு நீரே மழையாகப் பொழியுமானால் பயிர்கள் எவ்வாறு வாழவும் வளரவும் முடியும்? பெற்ற தாயே தான் பெற்ற குழந்தைக்கு நஞ்சூட்டிக் கொல்வாளானால் அப் புறம் அந்தக் குழந்தையை யார்தான் காப்பாற்ற முடியும்? இமய மலை போன்ற பெரிய பெரிய மலைகளெல்லாம் நொறுங்கித் தூள் தூளாகப் போகுமானால் மணலை ஒன்று சேர்த்துக் கல் தூண்களை நிறுத்திக் கட்டிடங்கள் கட்டுவது எவ்வாறு முடியும்? ஆகவே, ஒழுக்கத்தில் இமயம் போன்றவர்களாகிய துறவிகள் தவறு செய்தால் இந்த உலகைக் காப்பாற்ற ஒருவராலும்

முடியாது. எனவே, துறவிகளும் பொதுத் தொண்டில் ஈடுபட்டுள்ளவர்களும் பலராலும் எந்தக் காலத்திலும் குறையே சொல்ல முடியாத தூய ஒழுக்கம் உடையவர்களாய் மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும்.

''செய்கதவம் செய்கதவம் நெஞ்சே! தவஞ்செய்தால்
எய்த விரும்பியதை எய்தலாம்—வையகத்தில்
அன்பிற் சிறந்த தவமில்லை; அன்புடையார்
இன்புற்று வாழ்தல் இயல்பு''

எனவும்,

''உற்றவர் நாட்டவர் ஊரார்—இவர்க்கு
உண்மைகள் கூறி இனியன செய்தல்
நற்றவம் ஆவது கண்டோம்—இதில்
நல்ல பெருந்தவம் யாதொன்று மில்லை''

எனவும் பாரதியார் இன்றைய நிலைமைக்கு ஏற்பத் தவம் என்பதற்கு புது விளக்கம் தருகிறார்.

துறவிகள் அன்பு வடிவாய் இருப்பவர்கள்; எல்லார்க்கும் கைம்மாறு கருதாமல் அன்பினை வாரி வாரி வழங்கும் இயல்புடையவர்கள். ''ஆருயிருக் கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்'' என்று விரும்பும் உண்மைத் துறவிகள் — வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்று சொல்லி நெஞ்சம் உருகிய வள்ளலாரைப் போன்ற துறவிகள் — பிறவுயிர்கள் இன்புற்று வாழத் தம் உயிரையும் ஈயும் இயல்புடையவர்கள். ஆனால் தன்னலம் கருதும் போலித்துறவிகளோ எல்லாப் பொருளையும் தாமே அடைய முயற்சி செய்வார்கள்.

''அன்பிலார் எல்லாம் தமக்குரியர்''

என்று வள்ளுவர் கூறுவது இவர்களை நினைத்துத்தான்.

எனவே, கூடாவொழுக்கத்தால் நேரும் தவறுகளை நன்கறிந்த உண்மைத் துறவியர் உலகம் உய்வதற்குரிய தொண்டுகளை இடையறாது செய்வர்; புகழெனின் உயிரும் கொடுப்பர்; பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளமாட்டார்கள். இவ்வாறு அன்பு வடிவாக விளங்கித் தம்முடைய ஆற்றலைப் பெருக்கி இனியன பேசி வேண்டுவார்க்கு வேண்டுவன ஈந்து வாழும் இயல்புடைய துறவிகளும் பொதுத் தொண்டில் ஈடுபட்டவர்களும்

''மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே''

என்னும் புறநானூற்றுக்கு இலக்கியமாக விளங்கி இறவாத பெரு நிலையை அடைவார்கள். அவ்வழியே எல்லாரும் செல்லத் தக்க நல்வழியாகும் என்று கூறி என் உரையை நிறைவு செய் கின்றேன்.

* * *

நன்றி: குறள்நெறி என்னும் தலைப்பில் 'கூடாவொழுக்கம்' என்னும் அதிகாரத்தில் முதல் ஐந்து குறள்களுக்கு 14—9—1982 முதல் 18—9—1982 முடியத் திருச்சி வானொலி நிலையத்தி லிருந்து ஆற்றிய உரை.

* * * * *

இவ்வுரையை வெளியிட இசைவு தந்த வானொலி நிலையத் தினர்க்கு மிக்க நன்றி.

***

சங்கத் தமிழ் வளர்த்த
சான்றோர்கள்

—சிறுவை மோகனசுந்தரம்

	பெயர்	தோற்றம்	மறைவு
1	திரு. தேவநேயப்பாவாணர்	7—2—1902	15—1—1981
2	திரு. உரைவேந்தர் ஒளவை துரைசாமி	5—9—1903	3—4—1981
3	தவத்திரு அழகர் அடிகள் (இளவழகனார்)	10—4—1904	18—2—1981
4	திரு. புலவர் குழந்தை	1—7—1906	22—9—1972
5	தவத்திரு தனிநாயக அடிகள்	2—8—1913	1—9—1980

சித்திரைத் திங்கள்

—: வெண்பாப் பரிசுப் போட்டி முடிவு :—

முதற் பரிசு பெற்ற வெண்பா:

1 †தமிழேயென் தாய்மொழியே! தன்னை உணர்ந்தார்க்
கமிழ்தேயென் ஆருயிரே! அன்னாய்!—தமிழர்
தமிழ்வாழத் தாம்வாழ்த லென்னும் தகவே
தமிழவேள் செய்த தகவு

—புலவர் அ. வைத்தியலிங்கம்
தமிழாசிரியர், ஏம்பல்.

போட்டிக்காக வந்தனவற்றுள் வெளியிடத் தக்கவை எனப் பதிப்பாசிரியர் குழு தேர்ந்தவை:

2 ஒண்டமிழ்ச் சிங்கர் உறங்கி இருந்தக்கால்
கண்டார் கரந்தைத் தமிழ்ச்சங்கம்—பண்டை
அமிழ இருந்த அணிபுகழ் மீட்டல்
தமிழவேள் செய்த தகவு

—புலவர் சா. அடல்எழிலன்,
ஒன்பத்துவேலி, திருக்காட்டுப்பள்ளி.

3 நெஞ்சினிக்கும் நற்றமிழை நாளும் நினைந்திடவும்
வஞ்சமிகு வழக்கை மாற்றிடவும்—அஞ்சாத்
தமிழரென வாழ்ந்தோங்கத் தந்ததமிழ்ச் சங்கம்
தமிழவேள் செய்த தகவு

—திரு. இரா. அமிர்தலிங்கம், பி. எஃசி.,
தஞ்சாவூர்.

4 ஊக்கமொடு கொள்கைத்தேர் ஒட்டுதலும் நற்பணியை
ஆக்கமுடன் ஆற்றும் அறப்பாங்கும்—நோக்கின்
அமிழாத தொண்டுதமிழ்க் காக்கியதே தஞ்சைத்
தமிழவேள் செய்த தகவு

—புலவர் நா. தண்டபாணி, பி. ஏ., பி. லிட்.,
முதன்மொழி யாசிரியர், அம்பல்.

5 கண்ணென நற்கரந்தைக் கல்லூரி தோற்றுவித்தும்
பண்ணென நற்றமிழ்பா ராட்டியுயர்—தண்ணார்
தமிழ்ச்சங்கத் தொண்டுசெயச் சாற்றியவை எல்லாம்
தமிழவேள் செய்த தகவு

— இரா. சேரலாதன், எம். ஏ.,
கரந்தை.

6 தூன்னலத்தில் தோயார் தமிழ்க்குமுகாயந் தன்னை
உன்னிஉன்னி ஓர்ந்தார் உலகுவக்க—மன்னும்
அமிழ்தத் தமிழ்ச்சங்கம் ஆய்ந்தார் இதுதான்
தமிழவேள் செய்த தகவு

—கு. பழனிவேலன்,
அம்பல்.

---

†பரிசு பெற்ற புலவர் அ. வைத்தியலிங்கம் அவர்கட்குத் துந்துபி ஆண்டுக்குரிய தமிழ்ப்பொழில் திங்கள்தோறும் இலவசமாக அனுப்பப் பெறும்.

வைகாசித் திங்களுக்குரிய

—: வெண்பாப் போட்டி :—

ஈற்றடி: ''பைந்தமிழுக் கில்லை பகை''

பாடல்கள் வந்து சேர வேண்டிய

இறுதி நாள்: *10—6—1982*

பதிப்பாசிரியர் குழு

இன்பப் பேறு

நமது தொழிற்சாலைகளில் பணிபுரியும் உழைப்பாளிகளின் நலங் கருதி மருந்துக்கூடம், பசுமடம், பாலகர் பள்ளி, கலைக்கூடம், இன்பக் களரி, பூங்காவனம், முதலிய வசதிகள் அமைத்து அன்னவர் இன்முகங்கண்டு உவத்தலிலும் சிறந்த இன்பப்பேறு யாதுளது?

—*தமிழவேள் த. வே. உ.*

புத்தரைப் புரிந்துகொள்வோம்

—மா. ரா. அரசு, எம். ஏ.,

முன்னுரை:

புத்தர் ஒரு தத்துவம் — புத்தர் ஒரு காவியம் — புத்தர் ஒரு தெய்வம் — இப்படிப் பலர் பல கோணங்களில் புத்தரை உணர்ந்திருக்கிறார்கள், பலருக்கும் பலவாறு தோன்றும் புத்தர், ஆசைகளுக்கும் பாசங்களுக்கும் ஆட்பட்ட மனித குலத்தில் பிறந்தவர்.

மனிதராகப் பிறந்தும் வழக்கமான உலக வாழ்க்கையில் மனத்தைச் செலுத்தாமல் உயர்ந்த சிந்தனைகளில் ஈடுபாடு கொண்டு, அதன் மூலம் தம்மை உயர்த்திக் கொண்டு உலகுக்கும் ஞான வழிகாட்டிய மாபெரும் மனிதர் அவர்.

தம்முடைய கடின உழைப்பாலும், நெறி தவறாத வாழ்க்கை அமைப்பாலும், உன்னதமான போதனைகளாலும் உலக மக்களைக் கவர்ந்த அவர் ஓர் இலட்சியவாதி — உத்தமர் — அப்பழுக்கில்லாத துறவி.

சத்தியம், கருணை, அன்பு, அருள் — இவற்றையே வாழ்க்கைக் குணங்களாகக் கொண்டு வழி நடந்தவர் புத்தர். அவருடைய வாழ்க்கையின் சில பகுதிகளைப் புரட்டிப் பார்ப்போம்; அவரைப் புரிந்து கொள்ள அவை துணை செய்யலாம்.

உலகத்து உயிர்கள் எல்லாம் இன்ப வாழ்க்கைக்காக ஏங்குகின்றன. ஆனால், அவை துன்பத்தில் சிக்குண்டு தவிக்கின்றன. இதற்குக் காரணம் என்ன என்பதை உணர்ந்து தெளிய விரும்பினார் கபிலவசுதுவின் இளவரசரான சித்தார்த்தர்.

இன்பமயமான அரண்மனை வாழ்வைத் துறத்தலே, துன்பமயமான உலக வாழ்க்கைக்கு விடியலைக் காட்ட முதல்படி என்று எண்ணினார்.

சித்தார்த்தர்—போதி சத்துவராகி—போதி சத்துவர்—புத்தராக மாறத் துறவு வாழ்க்கை பெருந்துணை புரிந்தது.

துறவு வாழ்க்கையில் புத்தர் பிச்சை எடுத்து உண்ண வேண்டியிருந்தது. வீடு வீடாகச் சென்று, தம்முடைய பிச்சைப் பாத்திரத்தில் உணவு வாங்கி வருவார்.

துறவு வாழ்க்கையில் முதல் நாள் தாம் பிச்சை எடுத்துச் சேர்த்த உணவை உண்ணத் தொடங்குகிறார் புத்தர். பல வீட்டு உணவுகள் கலந்த கலவையாக இருந்தது அது.

அதில் ஒரு பிடியை எடுத்து வாயில் வைக்கிறார். உணவு உள்ளே செல்லவில்லை. அறுசுவை உணவையே உண்டு பழகிய அந்த உயர்குடி இளைஞர் பிச்சை உணவை உண்ண முடியாமல் தடுமாறுகிறார். அரண்மனை வாழ்விற்கும் துறவு வாழ்விற்கும் இடையே அவர் மனம் ஊசலாடுகிறது.

ஒரு நிமிடந்தான் அந்தத் தடுமாற்றம். ஒரு நிமிடத்தில் அலைவுகள்தாம் வாழ்க்கையையே மாற்றி அமைத்து விடுகின்றன. அன்று நாவிற்குப் புத்தர் அடிமையாகியிருந்தால் இன்று நம் நெஞ்சங்களில் தம் நினைவுச் சுவடுகளை அவரால் பதித்திருக்க முடியாது.

ஆனால், புத்தர் நாவிற்கு அடிமையாகவில்லை. நாவைத் தமக்கு அடிமையாக்கினார். மனத் தடுமாற்றத்தில் இருந்து தம்மை மீட்டுக் கொண்டார். துறவு வாழ்க்கையில் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற அடிப்படை உண்மை அவர் மனத்தில் நிலைத்தது. முதலில் கசந்த பிச்சை உணவு பின்னர் நிறைவுடன் உள்ளே சென்றது.

நினைத்த மாத்திரத்திலேயே உலகம் போற்றும் துறவியாக அவர் ஆகிவிடவில்லை. வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் இத்தகைய மனப் போராட்டங்கள் அவருக்கு நேர்ந்திருக்கின்றன. படிப்படியாக அவற்றை வென்று தம்மை அடக்கி நிமிர்ந்தவர் புத்தர்.

உண்மைதான். பின்னாளில் உலகிற்கெல்லாம் அன்பு வழியைப் போதித்த அவர், தொடக்கத்தில் சகிப்புத்தன்மையையும், கருணை உணர்வையும் தமக்குத் தாமே போதித்துக் கொண்டார். தம் மனத்தில் இருந்த வேண்டாத நினைவுகளையெல்லாம் அகற்றிவிட்டு, அங்கு அன்பையும், அருளையும், பெருந்தன்மையையும் வளர்த்துக் கொண்டார்.

அவருடைய வாழ்க்கையே புதுமைகள் நிறைந்தது தான். தவ வாழ்க்கையும் மாறுபட்ட ஒன்றாகவே அமைந்தது.

நிலையான இன்பம் எது என்பதையும் அதை அடைவதற்குரிய வழி எது என்பதையும் அறிய விரும்பி, அரண்மனை வாழ்வைத் துறந்த புத்தர் முதலில் சில முனிவர்களைக் கண்டு ஞானம் பெற முயன்றார்.

ஆளார காலமன், உத்தகன் போன்ற முனிவர்கள் தாங்கள் உணர்ந்த நெறிகளை அவருக்குப் போதித்தனர். போதி சத்துவரால் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அவர்கள் உயர்ந்தவை என்று நம்பிய வேள்விகளிலும், பிரார்த்தனைகளிலும், மந்திர உச்சரிப்புகளிலும் அவர் கவனம் செல்லவில்லை. அவையெல்லாம் முறையான வழிகளாக அவருக்குப் படவில்லை.

உடலையும் உள்ளத்தையும் கட்டுப்படுத்திக் கடுந்தவம் புரியத் தொடங்கினார் போதி சத்துவர். இஃது, அவருடைய தவ வாழ்க்கையின் இரண்டாவது கட்டம்.

உடலை வருத்திக் கடுந்தவம் புரிந்தும், எதிர்பார்த்த பலன் அவருக்குக் கிட்டவில்லை. உடலை வருத்துவதனால் ஆசைகள் அடங்காது இருப்பதையும் ஞானப்பேறு கிட்டாது இருப்பதையும் போதி சத்துவர் தெரிந்து கொண்டார். உடலை வருத்துவது பயன்படாது என்பதை உணர்ந்த அவர் அதையும் விடுத்தார்.

தம் மனம் முழுமையாக ஏற்றுக் கொள்ளாத எதையும் அவர் ஒப்புக் கொண்டதில்லை. பிறர் சொன்னவை ஒவ்வொன்றையும் மறு ஆய்வு செய்த பிறகே — தமக்குச் சரியென்று தோன்றிய பிறகே ஏற்றுக் கொண்டார்.

ஆரவாரங்களிலும், வீணாக உடலைத் துன்புறுத்துவதிலும் ஈடுபடாத அவருடைய மனம் தியானத்தில் ஆழ்ந்தது. உலகின் பல்வேறு இயல்புகள் பற்றி ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினார் போதி சத்துவர். சிந்திக்கச் சிந்திக்க அவர் உள்ளம் பல உண்மைகளை உணர்ந்தது. பிறருடைய உதவியும் வழிகாட்டுதலும் இன்றி, தம் சொந்த ஊக்கத்தினாலும் முயற்சியினாலும் புத்தர் பெருமான் ஞானத்தை அடைந்தார்.

உலக மக்களின் துன்பங்களைப் போக்குவதற்குரிய வழிகளை அவர் மனம் கணித்தது. மனித அறிவுக்குப் பொருந்தும் வழிகளான அவை, மகத்தான உண்மைகளாக அமைந்தன.

கௌதம புத்தரின் அரிய வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பற்றியெல்லாம் அறிந்துகொள்ளும்போது நெஞ்சில் நிம்மதி பிறக்கிறது; அமைதி தவழுகிறது. அந்த அதிசய மனிதரின் வாழ்க்கை நடப்புகள் பற்றி மேலும் சில அறிந்துகொள்வது அவரைப் புரிந்து கொள்ள உதவும்.

ஒரு சமயம் வைசாலி நகரில் புத்தர் தம் சீடர்களுடன் தங்கியிருந்தார். அந்நாளில் அம்பாபலி என்ற கணிகை வைசாலியில் பெயர் பெற்று விளங்கினாள். துறவிகளும் மனம் பேதலிக்கக் கூடிய பேரெழில் வாய்ந்தவள் அவள். அந்த அழகரசி புத்த தேவனைத் தரிசித்து ஆசி பெற விரும்பி அவரிடம் சென்றாள்.

அவளுடைய வருகையைப் புத்தர் தம்முடைய ஞானத்தால் அறிந்து கொண்டார். அவள் அழகைப் பார்த்ததுமே பிக்குகளின் உள்ளம் கலங்கிவிடக் கூடாது என்பதற்காக, உடனே பிக்குகளுக்கு உபதேசம் செய்யத் தொடங்குகிறார். மன அடக்கத்தையும் புலனடக்கத்தையும் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார்.

மகரிசி பட்டத்திற்காகக் கடுந்தவம் புரிந்த தவசியான விசுவாமித்திரர், தம்முடைய தவத்தைக் கலைக்க வந்த மேனகையின் அழகில் தோற்றதையும், பிரமச்சரிய விரதத்தையே ஒரு தவமாகக் காத்து வந்த ரிசிய சிருங்கர், அங்க தேசத்து வேசி ஒருத்தியின் சாகசங்களில் தம்மை இழந்ததையும் நினைவுபடுத்திக் கொள்வோம்.

புத்தர் உலகியல் அறிந்தவர். துறவிகள் என்றாலும் அவர்களும் மனிதர்கள்தாமே. மனிதர்களை அலைக்கழிக்கும் ஆசைகளுள் பெண்ணாசை தவிர்க்க இயலாததாயிற்றே.

துறவிகள் தங்கள் மன உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டுவந்து, ஆசைகளை வென்றவர்கள் என்றாலும், அம்பாபலி போன்ற அழகுத் தாக்குதல்கள் நேரும்போதெல்லாம், மன உணர்வுகள் சலனப்படுவதை அவர்களும் சில நேரங்களில் தவிர்க்க இயலாமல் போகலாம்.

அதற்காகத்தான் புத்தர் அந்த அழகுத் தேவதை வருகை புரிந்த நேரத்தில் தம் உபதேசத்தை நிகழ்த்தினார். வாழ்க்கையின் உண்மையை அவர்களுக்கு நினைவுபடுத்தினார். மனச்சலனம் தவிர்த்துச் சமநிலையை உண்டாக்கினார்.

புத்தரின் தனித்தன்மைகளுள் இதுவும் ஒன்று. உலகத்தையும் மக்களின் மனநிலைகளையும் அனுபவத்தால் படித்தறிந்தவர் அவர். மனத்தை வெல்வது எவ்வளவு கடினமான செயல் என்பதையும் அவரறிவார்.

அதனால்தான் சோதனைகள் நேரும்போதெல்லாம் நல்ல சிந்தனைகளில் மனத்தைத் திருப்பி, சலனங்களையும் சபலங்களையும் வெல்ல வேண்டும் என்று வழிகாட்டினார். படிப்படியாகப் பயிற்சி செய்யுங்கள். மனம் உங்கள் வயப்படும் என்றார்.

ஊருக்கு மட்டும் உபதேசித்திருந்தால் புத்த தேவன் இன்று நம் மனங்களில் கலந்து நம் வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் உரியவர் ஆகியிருக்க முடியாது.

தம்மை நெறிப்படுத்திக் கொண்ட பிறகே, மற்றவர்களுக்கு நெறியைக் காட்டியவர் அவர். தம்மை வென்ற அவரை வெல்ல எந்தப் பெண் மகளாலும் முடியவில்லை. பெண்ணுணர்வு என்ற தீயைக் காலால் தேய்த்து அழித்த பிறகே, பிறருக்கு அதைப் பற்றி அறிவுறுத்தினார்!

புத்தரின் வாழ்க்கை நிகழ்ச்சி ஒன்று நினைவிற்கு வருகிறது.

கௌதமரைத் தன்னுடைய நாட்டிற்கு வருமாறு வேண்டுகிறார் அவருடைய தந்தை சுத்தோதனன். பல ஆண்டுகளுக்கு முன்னால் ஒருநாள் இரவில் எல்லோரையும் விட்டுப்பிரிந்து, ஞானத்தைத் தேடி வந்த சித்தார்த்தன் ஞானத்தால் நிறைந்து புத்தராகிய நிலையில் தம்முடைய தந்தையின் நாட்டிற்குப் போகிறார்.

சுற்றத்தார் அனைவரும் வந்து வணங்கி நின்றனர். புத்தரின் மனைவி யசோதை மட்டும் வரவில்லை. எல்லாரும் வற்புறுத்தியும் வந்து பார்க்கவில்லை அவள். ''மதிக்கத் தகுந்த பண்புகள் என்னிடம் இருக்குமாயின் என் கணவர் என்னைப் பார்க்கட்டும்'' என்று சொல்லி விடுகிறாள். இதைக் கேட்ட புத்தர் தம்

முள் சிரித்துக் கொள்கிறார். அந்தப்புரம் சென்று அவளைச் சந்திக்கவும் முடிவு செய்கிறார்.

அந்தச் சந்திப்பும் நிகழ்கிறது. எத்தகைய விசித்திர மான சந்திப்பு அது. கணவனும் மனைவியும் சந்தித்துக் கொள் கிறார்கள். ஆம்! ஒரு காலத்தில் கணவனும் மனைவியுமாக வாழ்ந்தவர்கள்தாமே அவர்கள்.

யசோதை போதி சத்துவரின் பாதங்களைப் பற்றிக் கொண்டு கலங்கி அழுகிறாள். அவளது கறுத்துச் செழித்த கூந்தல் அவர் பாதங்களில் பட்டு நிமிர்கிறது.

அவளது கறுத்துச் செழித்த கூந்தல் பாதங்களில்பட்டு நிமிரும் போதெல்லாம் மனம் சிலிர்த்த நாட்கள் சித்தார்த்தன் வாழ் வில் உண்டு. ஆனால், அவை பழங்கதையாகி விட்டன. கணவ னும் மனைவியுமாக அவர்கள் சேர்ந்து வாழ்ந்த வாழ்க்கை, மகிழ்ந்து கழித்த நாட்கள் இவையெல்லாம் காலம் தேய்த்த கனவுக ளாகி விட்டன.

துறவியாகிய புத்தர் தம் மனைவியைச் சந்திக்க அந்தப்புரம் வந்தபோது தம் சீடர்களிடம் என்ன சொல்லி எச்சரித் தார் தெரியுமா?

என்முந்தைய மனைவி இன்னும் முதிர்ந்த பக்குவ நிலையை அடையவில்லை. ஆகவே, என்னைக் கண்டதும் ஓடி வந்து அவள் என்னைப் பற்றிக் கொண்டால், துறவியைத் தொடக் கூடாது என்று அவளைத் தடுக்க வேண்டாம் என்று சொன்னார்.

இது, அவருடைய மனநிலையை நமக்கு உணர்த்த வில்லையா? தன்னை வென்று அடக்கிய ஆளுமை அவருடைய பேச்சில் விளங்கவில்லையா?

அந்நாளில் துறவு வாழ்க்கை புதிதன்று; மனைவிய ருடன் துறவிகள் வாழ்ந்ததும் புதிதன்று. பத்தினியரொடும், பிள்ளைகளொடும் முனிவர்கள் வாழ்ந்த காலம் அது.

அந்தக் காலத்தில் — அத்தகைய சூழ்நிலையில் — யாருடைய வற்புறுத்தலும் இல்லாமல் தம்முடைய மனைவியை ஊர் அறிய—உலகறிய மணந்து கொண்ட உத்தம மனைவியை — பேரழகியைத் துறந்து விட்டுச் சென்ற மாமுனிவர் புத்தர்பிரான்.

துறந்து சென்றவர் மீண்டும் அவளைச் சந்திக்கிறார். அவர் விரும்பியிருந்தால் அவளொடு மனை வாழ்க்கையைப் புதுப்பித்துக் கொண்டிருக்கலாம். ஆனால், அவர் விரும்பவில்லை. அவளுடைய கதறல் அவரைச் சலனப்படுத்தவில்லை.

துறவியாக அந்தப்புரத்தில் நுழைந்தவர் துறவியாகவே திரும்புகிறார். எத்தகைய மனவலிமை! மனப் பக்குவம்! நினைத்தாலே மெய்சிலிர்த்துப் போகிறது.

இந்தப் பெருநிலைக்குத் தம்மை உயர்த்திக் கொண்டதால்தான் அம்பாபலியின் வருகையின்போது நிலை தடுமாற்றம் அவருக்கு ஏற்படவில்லை. முழுமை அடையாத பிக்குகள் பேதலித்து விடக்கூடாது என்பதற்காக அறவுரையும் செய்தார்.

இவரை, மாரனை வென்றவர் என்று மணிமேகலை என்னும் பௌத்த காப்பியம் போற்றுகிறது.

புத்தர் பெருமானுக்கு இணையான துறவி உலகத்தில் இதுவரை பிறக்கவில்லை என்கிறார் இன்னொரு துறவியான விவேகானந்தர்.

புத்தரின் போதனைகள் சிறப்பானவை. படிக்கவும், அறியவும், பின்பற்றவும் தக்கவை. சான்றுக்கு ஒன்று பற்றித் தெரிந்து கொள்வோம்.

அறியாமல் செய்த பிழைகளால் பாவம் இல்லை. அவை மன்னிக்கக் கூடியவையே என்று புத்த மதம் கூறுகிறது. ஆனால், மற்ற சமயத்தினர் இதை ஏற்கவில்லை. அறிந்து செய்தாலும் சரி, அறியாமல் செய்தாலும் சரி, பாவ புண்ணியங்களின் பலன்கள் ஒருவனைப் பாதிக்காமல் இருப்பது இல்லை என்பது அவர்கள் எண்ணம். ஒரு கதை நினைவிற்கு வருகிறது.

> வேத அறிவிலும், சத்தியத்திலும், மனவுறுதியிலும், தவத்திலும் சிறந்து விளங்கிய துறவி ஒருவர் இருந்தார். அவர் பெயர் மரண்டவ்யர் என்பது. செய்யாத பிழைக்காக ஒருமுறை அவர் தண்டிக்கப்பட்டார். அரசனுடைய காவலர் அவரைச் சூலத்தில் - கழுவில் - ஏற்றிவிட்டனர். யோகத்தில் இருந்த காலத்தில் கழுவில் ஏற்றப் பட்டதால் அவருக்கு இறப்பு நேரவில்லை. செய்தி அறிந்த அரசன் வந்து அவரை விடுவித்து

மன்னிக்க வேண்டுகிறான். துறவி அரசனை வெறுக்க வில்லை. அவர் நேரே தருமதேவனிடம் சென்று முறையிட்டார். ''இந்தத் தண்டனையை அனுபவிக்கும் படியாக நான் செய்த தவறு என்ன என்று வினவினார். தருமதேவன் சொல்கிறான்: ''ஐயனே! நீர் சிறுபிள்ளை யாக இருந்தபோது, வண்டுகளையும் சிறு பறவைகளை யும் பிடித்துத் துன்புறுத்தினீர்கள். அதன் பயனே இந்தத் தண்டனை என்றான்.'' அரசனை வெறுக் காத மாண்டவ்யர் தருமதேவனைச் சினந்து நோக்கி னார். ''அறியாத வயதில் அறியாது செய்த பிழைக்கு மிகப் பெரிய தண்டனையை நீ விதித்துள்ளாய்'' என்று கூறி, தருமதேவனையே புவியில் மனிதனாகப் பிறக்கும் படி அவர் சபித்து விடுகிறார்.

இப்படிமுடியும் இந்தக் கதை மாபாரதத்தில் வருகிறது. இந்தக்கதையைக் கேட்கும்போது புத்தர் சொன்ன பாவ புண்ணியச் சிந்தனையின் மகத்துவம் விளங்குகிறது அல்லவா?

முடிவுரை:

இதுவரை புரட்டிய பக்கங்கள் புத்தர் என்ற உன்னத மான மனிதரை ஓரளவாவது புரிந்துகொள்ள வழிவகுத்தன.

உலகம் போற்றும் ஞான விளக்கான அந்தத் தூய மனிதரின் நினைவைப் போற்றும் வகையில் நாம் செய்யக்கூடியது ஏதாவது உண்டா?

இதோ! 'சாதக மாலா' என்னும் பௌத்த நூல் சொல்லுகிறது:

> ''ஒருவரை உண்மையாக நாம் கௌரவிக்க வேண்டு மானால், அவர் செய்த உபதேசங்களைக் கடைப் பிடித்து ஒழுக நாம் தவறக் கூடாது. மாலைகள் அணி விப்பதும், மலர்கள் தூவுவதும், தீப ஆராதனைகள் நடத்துவதும் அவரைப் பெருமைப் படுத்துவன ஆகா''

> ''புத்தர் பெருமானே! உம்மை வழிபடுவது உலகுக்கு நன்மை செய்வதில் அடங்கியிருக்கிறது.''

இப்படிச் சொல்லுகிறது, 'பக்தி சதகம்' என்னும் நூல்.

—:(நிறைவு):—

தமிழ்த் தென்றல்
திரு. வி. க. நூற்றாண்டு விழா

தமிழகச் சான்றோர்களுக்கு ஒரு நினைவூட்டல். செந்தமிழ் நாட்டைச் சீரிய முறையில் உயர்த்திய பெருமை உடையவர், 26—8—1883-இல் தோன்றிய திருவாரூர் வி. கலியாணசுந்தரர். தம் கல்வி இடையில் நின்றதால் அவர் தமிழ்ச் சமுதாயத்திற்கு பணி செய்யும் கற்பூரத் தொண்டரானார் ஆசிரியர் மறைமலையடிகள், மயிலை சண்முக முதலியார் முதலியவர்களிடமும் ஆசிரியர் கதிர்வேற் பிள்ளை அவர்களிடமும் தமிழ் கற்று தமிழ் நாட்டின் பெருமையை மிகச் சிறந்த முறையில் உலகிற்கு எடுத்துக் காட்டினார். ஏறத்தாழ நாற்பது ஆண்டு காலம் மானிடம் வாழ வாழ்ந்தார். அந்நாட்களில் வடமொழி கலந்த தமிழ் பாதியும், ஆங்கிலம் கலந்த தமிழ் பாதியும் பேசிய காலம். அக்காலத்தில் திரு. வி. க. அவர்கள் அரசியல் செயற்பாடுகளைத் தூய்மையான இனிய எளிய தமிழில் ஆய்ந்து மக்களுக்குத் தெரிவிப்பார். புதிய அரசியல் கருத்துக்களை மிகுந்த ஆவேசத்துடன் பேசி இளைஞர் சமுதாயத்தை எழுச்சியுறச் செய்வார். தமிழகத்தில் தேசிய கருத்துக்களை எளிய தமிழில் பரப்பிய பெருமை இவரையே சாரும். பேராசிரியராய், உரைநடையாளராய், சிறந்த சொற்பொழிவாளராய் கவிஞராய், பதிப்பாசிரியராய், விளக்க உரை வித்தகராய், தேசிய வாதியாய், அரசியல் வாதியாய், தொழிலாளர் தலைவராய், சமயப் பிரசாரகராய், சன்மார்க்கத் தொண்டராய், அச்சக வித்தகராய், மார்க்சிய கொள்கையுடையவராய் இருந்து ஒருரு கொண்டு மானிடராய் --மனிதத் தன்மையுடன்-- விளங்கினார். "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்ற நிலையை உடையவராய் இருந்தார்.

மேலே கூறியது போன்று கற்பூரத் தொண்டராய் விளங்கி மறைந்தார்கள். அவர்களே ஓர் இடத்தில் சொல்கிறார்கள்.

> "தொண்டினும் சிறந்த ஒன்று இருக்கிறதா? எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. தொண்டே எனது வாழ்க்கை; எனது செல்வம்; எனது ஆருயிர்; எனது சமயம்; எல்லாம்; எல்லாம். விளைவு என்ன ஆயினும் ஆகுக. அது பற்றிய கவலை எனக்கில்லை.

'என் கடன் பணி செய்து கிடப்பதே'. எனக்குப் பிறப்பு வேண்டும்; பிறப்புப் பயன் கருதாத் தொண்டுக்குப் பயன்படுதல் வேண்டும் சாதி, மதம், மொழி, நிறம், நாடு முதலியவற்றைக் கடந்து நிற்கும் பொதுமை அறத்துக்குரிய சன்மார்க்கத் தொண்டு செய்தல் வேண்டும். இதுவே எனது வேண்டுதல்.''

இத்தகு சான்றோர்க்கு, சமணராய், பௌத்தராய், சைவராய், வைணவராய், கிறித்துவராய், பொதுமை வேட்பவராய் விளங்கியவருக்கு இவ்வாண்டு 26–8–'82-இல் நூற்றாண்டு விழா தொடங்குகிறது. 26—8—'83-இல் முடிகிறது. திரு. வி. க. வுக்கு சொந்தக்காரர்களாகிய தமிழ் நெஞ்சங்கள் ஒன்றுகூடி சிறந்த ஏற்பாடுகளைச் செய்யுங்கள். இதுபற்றிய ஒரு சிறு ஆய்வுக் கூட்டம் 9—1—'28 சனி மாலை 6 மணி அளவில் சென்னை, மண்ணடி பவழக்காரத் தெருவில் உள்ள ஏ. ஆர். சி. பள்ளியில் நக்கீரர் கழகச் சார்பில் திருமதி கே. சகுந்தலா அம்மையார் அவர்கள் தலைமையில் கூடியது.

கழகத் துணைத் தலைவர், திரு அரு. சங்கரலிங்கம் அவர்கள் நூற்றாண்டு விழா செயல்முறைத் திட்டங்களைத் தொடங்கி வைத்தார்கள்.

கூட்டத்திற்குப் பேராசிரியர் அ. கி. பரந்தாமனார், பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், டாக்டர் அ. நாகலிங்கம், டாக்டர் கு. மோகனராசன், திரு. ச. சிவகுமரன், எம். ஏ., திரு. அன்புப் பழம்நீ, பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன், கவிக்கொண்டல் ம. செங்குட்டுவன் முதலிய பல தமிழ் அறிஞர்கள் வருகை தந்து கருத்துரைகள் நல்கி சிறப்பித்தனர்.

கூட்டத்தில் அறிஞர் பெருமக்கள் கீழ்க்கண்ட செயல்முறைகளை ஒருமனதாகத் தீர்மானித்தார்கள். அவை வருமாறு.

1 திரு வி. க. நூற்றாண்டு விழாவினைப் பாரதியார் நூற்றாண்டு விழாவினைப்போல் கொண்டாடத் தமிழக அரசை வேண்டுதல்.

2 திரு. வி. க. வாழ்ந்த இல்லத்தை நினைவுச் சின்னமாக்கல்.

3 திரு. வி. க-வின் நூல்களை அரசுடமையாக்கி வெளியிடுதல்

4 திரு. வி. க.-வின் முழு உருவச் சிலையை இராயப்பேட்டையில் அமைக்க ஏற்பாடு செய்தல்.

5 திரு. வி. க-வின் நூற்றாண்டினைச் சிறப்பிக்கும் வகையில் 'அஞ்சல் தலை' வெளியிட வேண்டுதல்.

6 திரு. வி. க.-வின் கடிதங்களையும், முன்னுரைகளையும் தனித்தனி நூலாக வெளியிட வகை செய்தல்.

7 திரு. வி. க வாழ்க்கையையும் தொண்டினையும் விளக்கும் வகையில் ஆங்கிலத்தில் ஒரு குறிப்பு வெளியிடுதல். சிறந்த பொருட்காட்சி வைத்தல்.

8 சென்னை இராயப்பேட்டை வொயிட்சு சாலையைத் 'திரு. வி. க. சாலை' என வழங்க வேண்டுதல்.

9 நூற்றாண்டு விழா நினைவாகக் கல்லூரி, மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டுரை, பாட்டுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கல்.

10 நூற்றாண்டு விழா நினைவு மலர் ஒன்று சிறப்பான வகையில் வெளிவரவும், தமிழகத்தில் உள்ள எல்லா வகையான நாள், வார, கிழமை இதழ்களை 26–8–'82-இல் நினைவு இதழ்களாக வெளிவரவும் முயலுதல்.

11 திரு. வி. க. நூற்றாண்டு விழாவினை 26—8—'82 முதல் 26—8—'83 வரை சிறப்பாக கொண்டாடத் தமிழகத்தில் உள்ள பல்வேறு நிறுவனங்களையும் பல்கலைக் கழகங்களையும் வேண்டிக் கேட்டுக் கொள்ளுதல்.

12 நூற்றாண்டு விழாக்குழு அமைக்கவும் குழுவிற்குத் தலைமை ஏற்று உதவ தமிழக முன்னாள் முதல்வர் பெரியவர் திரு. மீ. பக்தவத்சலம் அவர்களை வேண்டுதல்.

மற்றும் நூற்றாண்டு விழா சிறப்பாக அமையவும் விழாக்குழு பட்டியல் ஒன்று வெளியிடவும் விரிவான பணிகளை மக்கள் முன் வைக்கவும், அடுத்து மார்ச்சுத் திங்கள் 6-ஆம் நாள் மாலை கூடி இந்த அமைப்புக் குழு ஏற்பாடு செய்யும்.

தமிழ்ச் சான்றோர்கள் திரு. வி. க.-வின் நூற்றாண்டு விழா அவரவர்கள் மேற்கொள்ளும் சிறப்பு விழாவாகத் தமிழக மெங்கும் சீரிய முறையில் கொண்டாடவும், மற்றும் இலங்கை, மலேயா, டெல்லி, பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களில் கொண்டாடவும் அமைப்புக் குழுவின் சார்பில் பணிவன்புடன் வேண்டுகிறோம்.

'தமிழகம்'
22, பிள்ளையார் கோயில் தெரு
சென்னை-600 081
11—1—'82

சென்னை
நக்கீரர் கழகத்தினர்

''இச்செய்தியை உலகெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்''

திறனாய்வுக் கலை

பேராசிரியர் சி. கோ. தெய்வநாயகம், எம். ஏ., எம். ஃபில்.,

யாதானும் ஒரு பொருளில் பொதிந்து கிடக்கும் உண்மை அழகு உணர்வு, கலை ஆகிய அடிப்படைச் சிறப்புக் களைக் கண்டறிந்து, பலரும் அறிய எடுத்துக் காட்டுவது திற னாய்வு ஆகும். யாதானும் ஒரு பொருளை வரிசை காட்டலும் திறனாய்வுதான். ஒரு பொருள் — புறப்பொருளோ-- அகப் பொருளோ அது முகிழ்ப்பதற்கான காரணியங் கூறுவதும் திற னாய்வே. ஒன்றன் உண்மையினை வரிசைக் காட்டி வகைப்படுத்து வதும் அதுவே அவ்வழி இஃது இத்தன்மைத்து என உரைப்பதும் திறனாய்வுக் கலையாகவே அமைகிறது.

திறனாய்வு என்பது வேறு; ஆராய்ச்சி என்பது வேறு. திறனாய்வு ஆராய்ச்சியுள்ளடங்கும். ஆராய்ச்சி திறனாய்வால் மட்டும் நிறையாது. ஆய்வில் திறனறிதல் உண்டு. திறனறிதலை ஆய்தல் என்பது இல்லை; இயலாது. திறன் உணரத்தக்கது. ஆய்வு சிந்திக்கத்தக்கது. ஒரு பொருளின் உண்மையினை உணர்ந்தபோது அதன் திறன் வெளிப்படுகின்றது. அதுபோல் சிந்தித்து தேர்ந்தபோது ஆய்வு அமைகின்றது.

திறனாய்வாளரும்
திறன் உணர்முறையும்-அ.

பொதுவாக ஒரு பொருளைப் பற்றி அறிந்து கொள்ளு தற்கு முன்பு. முதற்கண் அப்பொருள் யாது என்ற தேர்ச்சி பெறல் வேண்டும். இலக்கியமா? இலக்கணமா? ஓவியமா? சிற்பமா? என்ற பாகுபாடு உணராது திறனறிதல் இயலுமா?

சான்றாக இலக்கியத்தைத் திறனாய்வு செய்ய விழை யும் ஒருவன், முதற்கண் இலக்கியம் என்பது ஒருவனது அறிவு அன்றி உணர்வின் உந்துதலால் எழுதப்பட்ட சொற்குவியல்' என்ற தெளிவு பெற்றிருத்தல் வேண்டும்.

அடுத்து எந்த அமைப்பில் — வடிவில் அந்த சொற் குவியல் அமைந்திருக்கின்றது என்று காணல் நலம். சான்றாக அவ்விலக்கியம் புதினம் என்ற வடிவுடையதாயிருப்பின் ...

அதனை அவ்விலக்கியன் எந்த அடிப்படையில் எழுதியுள்ளான் எனக் காணல் வேண்டும். சமுதாயத்தில் கண்ணுற்ற கேட்ட அல்லது அனுபவித்த ஒன்றை அப்படியே உணர்வு நிரம்ப ஆசிரியன் படைக்கின்றான் என்றால் ...

அவ்வுணர்வு ஏன் அவ்வாசிரியனை எழுத்துக்கு உந்திற்று எனத் தேர்தல் சாலும். இத்தகு உணர்வின் உறுத்தலை சமுதாயத்திற்கு அறிவித்து சமூகத்தை ஆற்றுப்படுத்தும் முனைப்பே இவ்வெழுத்தின் தோற்றம் எனத் தேர்ந்தால் ...

எதனை அறிந்து கொள்ள, அல்லது எதனை அறிவிக்க அவன் விழைந்தான் எனத் தேர்தல் வேண்டும்.

சமுதாயத்தின் குறிப்பிட்ட அந்நிகழ்ச்சி அவனுளத்தே அவ்வுணர்ச்சியைத் தருதற்குறித்தாம்படி அச்சமுதாயம் எப்படியிருத்தது—அக்கால வகையும்—வாழ்வியலும் எப்படி யிருந்தன என்பவற்றைத் தெளிதல் வேண்டும்.

காலமும் சமுதாயமும் அப்படியிருந்த நிலையில் இக்கருத்தினை அல்லது உணர்வினை அவ்விலக்கியன் தான் எந்த உண்மையினடிப்படையில், எந்தக் கண்ணோட்டத்தோடு பெற்றுள்ளான் என வுணர்தல் இன்றியமையாதது.

இலக்கியனின் அக்கண்ணோட்டம் அவனை அவனது வாழ்வில் மாற்றங்கட்கு ஆட்படுத்தும் அளவினதாக இருந்ததா என அறிதல் வேண்டும்.

அத்தகைய உளப்பாங்கு — இத்தகைய சொற்குவியல் இவற்றிடை உள்ள ஒப்புமைநலம் தேர்தல் அடுத்து வேண்டப்படும்.

இலக்கியனின் எழுத்து அவனது உணர்வினை எந்த அளவிற்கு, எந்த முறையில், எந்த வடிவத்தில், எந்த நோக்கில் வெளிப்படுத்துகின்றது என்ற தரங்காணும் சிறப்பு அடுத்து நேர்கிறது.

இவ்வாறு இலக்கியனை அறிந்தபின் திறனாய்வன் தன் முனைப்புக் குறித்த சிந்தை பெறல் வேண்டும்.

திறனாய்வாளன் ஒரு இலக்கியத்தை 'எந்தக் கண்ணோட்டத்தில் காண்கிறோம்' என்ற தன்முனைப்பு நோக்கினைக்

கொண்டிருத்தல் திறனாய்விற்கு நல்ல அடிப்படையாகும். அத்துடன் தான் மேற்கொள்ளும் திறனாய்வுக் கோட்பாடு என்ன எனத் தெளிதல் நலம்.

ஏனைத் திறனாய்வாளரின் கோட்பாட்டில் அல்லது விதிமுறையில் தாம் மேற்கொள் முறை எதிலடங்கும், தனது 'கொள்முறை' ஏனைத் திறனாய்வரின் 'கொள்முறையொடு' ஒப்பீட்டு நோக்கில் பொருந்துகிறதா? மாறுபடுகின்றதா? பெருமை—சிறுமை அடைகின்றதா? என்ற விளக்கம் பெறுதல் திறனாய்வனுக்குத் தேவையாகும்.

தாம் 'மேற்கொள் முறை'யில் தமக்குத் தெளிவிருக்கிறதா? அதற்குமேலும் சிறப்பிற்குரித்தாய் எவ்வெந் நூற்களைக் காணல் வேண்டும், என்ற செயற்பாட்டுடன் அம்முறையில் தேர்ச்சிபெறுதலும் தான் அவனது திறனறித்திறத்தினை சிறக்கச் செய்கின்றன.

முந்தையோரினின்றும் தாம் கூறியுள்ள கருத்து புதுமையானதா? வேறுபட்டதா? சிறந்ததா? என்ற சிந்தனை 'பழமையிலே புதுநினைவு பாய்ந்தெழுதலாய்' அமைந்து திறனாய்வனைச் சீருறச் செய்யும்.

இக்கருத்துக்கள் யாவற்றையும் 'திறன் புரிதல்' என்ற பகுதியாகக் கொள்ளலாம். அதுவே அணுகுமுறையாகவும் அமையும்.

நுண்கலையும்
இலக்கியக் கலையும் - ஆ.

கலை தெய்வீகம். அது சிந்தை அமைதி மிக்கது. கற்பனை ஊற்று ஐம்புல இன்பத்தொடு அழியாத ஆறாம் புலத்தின்பத்தினை வாரி வழங்குவது காலங்கடந்தது. வழிவழித் தொடர்வது. பருப்பொருளையும் புலப் பொருளையும் பற்றுக்கோடாக் கொள்வது என்றும் வாழ்வது ஆகும். ஓவியக் கலை, சிற்பக்கலை. நாட்டிய-நாடகக் கலை, இலக்கியக்கலை முதலியன இவ்வகைக் கலைகளாகக் கருதப்படுவன.

இக்கலைகள் அனைத்திலும் இலக்கியக் கலைத் தவிர ஏனைக் கலைகள் அனைத்தும் ஒரு சாரன. 'நுண்கலை' எனப் போற்றப்படுவன. நுண்கலைக்குப் பருப்பொருள் தேவை. இலக்

கியக் கலைக்கோ உணர்வுப் பொருள் போதுமானது. இசை யொன்று தவிர ஏனை நுண்கலைகள் புறக்கண்வழிப் புலனாந் தன்மையன. இலக்கியக் கலையோ இசையொடு அகக்கண் வழி ஐம்புலன்களையும் இனிமை பெறச் செய்யும் ஆற்றல் மிக்கன.

நுண்கலைகள் காலத்தை வெல்வன; இடத்தை வெல்லாதன. இலக்கியக் கலையோ காலத்தையும் இடத்தையும் ஒருங்கே வெல்லுஞ்சிறப்பின.

நுண்கலை தரும் இன்பத்தினை அவ்வக் கலைப் பயிற்சி மிக்காரே உற்றின்புற முடியும். இலக்கியமோ, கற்றார் கல்லார் அனைவர்க்கும் அழியா இன்பம் தரத்தக்கது.

துய்ப்போன் ஒருவனே நுண்கலையின் பேரின்பத்தைப் பெற நேரும். கற்றோனுடன் கேட்டோனும் பேரின்பம் அடையும் பெற்றி இலக்கியக்கலை ஒன்றற்கே யுரியது.

நுண்கலையின் சிறப்புரை அவ்வக் கலைத் தேர்ச்சி வேண்டப்படுவதாம். ஆயின் இலக்கியக் கலைக்கு அவ்வரன் முறை இல்லை.

நுண்கலைச் சிறப்பு அறிந்து கொள்வதற்குக் கடுமை யானது. பலாச்சுளை போன்றது. இலக்கியமோ உணர்தற்கு இலகுவானது. வாழைப்பழம் போன்றது.

நுண்கலை இன்பம் வாழ்விய லின்பத்திற்கு ஒப்பானது. இலக்கிய இன்பமோ பேரின்பத்திற்கும் மிக்கது.

பக்திப் பாடல்களையும், ஞானப் பாடல்களையும் இலக்கியங்களாகப் பாடி பேரின்பப் பெருவீடு பெற்ற வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத்துள் வைக்கப்பட்ட சான்றோர் பற்றி நம் மரபு உரைக்கிறது ஆயின் நுண்கலைச் சிறப்பால் முத்தி பெற்ற நல்லாரை அக்கலை வழி. அறிவு வழி சிந்திக்கத்தான் நேர்கிறது.

நுண்கலைகள் மாறா வடிவத்தின. இலக்கியக்கலை நோக்கிற்கேற்ப மாறுந் தன்மையின. ஆயின்

ஒரு மலரைப் பற்றி தமிழிலும் பாடலாம்; ஆரியம், தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும்

பாடலாம். அதுபோது மொழி, ஒலி, பா வடிவம் மாறுபடு கின்றன. ஆனால் ... ... பொருள் ஒன்றே.

நுண்கலையோ நாட்டுக்கு நாடு, இனத்திற்கு இனம் மாறுபட்டது. இந்தியாவிலேயே பரதமும், கதகளியும், மணிப் புரியும். கூத்தும் ஒவ்வொரு பகுதிக்கும், இனத்திற்கும் உரிய தனிச் சிறப்புடன் விளங்குகின்றன. ஆயின் வகை என்ன? நாட்டியம்... அவ்வளவே.

நுண்கலையின் சுவை, நோக்கம், பயன் ஒன்றாகவே எப்போதும் இருக்கும். இலக்கியக் கலையோ மொழிக்கு இனத் திற்கு, குணத்திற்கு, பண்பாட்டிற்குத் தக வேறுவேறு சுவைகளை யும், நோக்கங்களையும், பயன்களையும் கற்பித்து வருகின்றன.

நுணுகி நோக்குமிடத்து இலக்கியக் கலை ஒருபால் நுண்கலைச் சிறப்பினையும் தம்மகப்படுத்தி மிளிர்வது காணலாம். காப்பியர் இக்கலையினை

'கண்ணினும் செவியினும் நுண்ணிதின் உணருங் கலை'

என்பர்.

கலைகள் வழி ஒரு நாட்டின், சமூகத்தின், நாகரிகத் தினைத் தேர முடியும். அவ்வழி இலக்கியக் கலை ஒரு பரந்த பரப்பில் கால இட, சமூகத்தைக் காட்டும் இயல்பினது. நுண் கலைகளோ ஒரு சிறு பகுதியின் தேர்ச்சியினைக் காட்டும் ஆற்றல் உடையது.

சான்றாக பல்லவர் கால மாமல்லைச் சிற்பக் கலைவழி பல்லவர் காலத்தில் வாழ்ந்த சிற்பியர் போலும், அரசர் போலும் சிறு பகுப்புத் திறனே வெளிப்பட நேர்கிறது. ஆயின் அதே பல்ல வர் காலத்திய நந்திக்கலம்பக இலக்கியத்தால்,

பல்லவ அரசியர்-குடும்பப் பூசல்களும், பல்லவ மன்னர் தம் தமிழ்க்கலைப் பற்றும், வீரமும், வெற்றிகளும், பண்புகளும், சமுதாயப் பழக்க வழக்கங்களும், மொழி நடையும், இலக்கியத் திறமும், பயிற்சியும், அரசு புரியும் ஆற்றலும், மக்களின் அன்றாட வாழ்வு, உணவு, ஆடை, அணிகலன்கள் முதலானவை அனைத் தினையும் ஒரு காலக் கண்ணாடியாகக் கொண்டு கண்டு தெளிவு பெற முடிகின்றது.

இவ்வாறு நுண்கலையால் முழுமையாகப் படைக்க வியலாத இலக்கியக் கலையின் வழி நுண்கலைகளும் உணர்த்தப் பெற்று போற்றப்படும் சிறப்பினை நல்கும் இலக்கியக் கலைகள் தொடுமணற் கேணிகளாக இலக்கிய வின்பத்தினைச் சுரக்கின்றன. கலைத் தாகத்தார் குடங்கையின் நொண்டு கொண்டு கழிபேரின்ப முறும் வகையினை இனிக் காண்போம்.

நந்தமிழின் நலங்காக்கும் ....

வாணிகர் தம் முகவரியை
வரைகின்ற பலகையில் ஆங்
கிலமா வேண்டும்?

'மாணுயர்ந்த செந்தமிழால்
வரைக' என அன்னவர்க்குச்
சொல்ல வேண்டும்!

ஆணிவிற்போன் முதலாக
அணிவிற்போன் ஈறாக
அனைவர் போக்கும்
நாணமற்ற தல்லாமல்
நந்தமிழின் நலங்காக்கும்
செய்கை யாமோ?

—பாவேந்தர் பாரதிதாசன்

தமிழன் என்ன செய்யப் ....

தமிழ்வளர வேண்டுமாயின், தமிழரது வாழ்வுக்கு உயிர்நாடியாக உள்ள திருமணம், கோவில் வழிபாடு முதலியன தமிழ் மொழியில் நடைபெறுதல் வேண்டும். தமிழன் தனது வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் தமிழை வளர்த்தல் வேண்டும். அதன் தனித் தன்மையைப் பாதுகாத்தல் வேண்டும். தமிழ் வளர்ந்தால்தான் தமிழன் வளர்வான். தமிழன் வளர்ந்து வாழ்ந்தால்தான் தமிழ் நாடு வாழ்தல் கூடும். தமிழன் என்ன செய்யப் போகிறான்?

—முனைவர் மா. இராசமாணிக்கனார்.

உ

மதுரை மாவட்ட அரசினர் உயர்பள்ளிகளில்

34 ஆண்டுகள்

பணியாற்றி, ஓய்வு பெற்ற,

—: பழ. த. சுப்பையன் விடுக்கும் செய்தி :—

வணங்கி வாழ்த்தினேன் வள்மிகு தமிழ்ப்பணி
தழங்கு நெளிகடல் தரணியில் ஓங்கிட
வளவர் ஆண்ட வளங்கெழு பதிகளில்
பளகறு பழமார் நேரியில் பிறந்தேன்;
திருக்காட் டுப்பள்ளி சிவசாமி அய்யரின் [ஐயரின்]

சிறந்திடும் உயர்நிலைப் பள்ளியில் பயின்றேன்;
சிவமே உருவாய்த் திகழ்ந்திடும் தலைவன்
உமாம கேசன் உளத்தில் தோன்றிய
தீஞ்சுவை குன்றாச் செந்தமிழ் வளர்திரு
தஞ்சைக் கரந்தைத் தனித்தமிழ்ச் சங்கம்

ஈந்த வித்துவான் பட்டமும் பெற்றேன்;
சின்னம னூரில் சீர்சால் குடியில்
பன்னரும் நலந்திகழ் பாவையை மணந்தேன்;
புண்ணிய மதுரை போர்டார் பள்ளிகள்
நண்ணும் புகழ்மிக் கோங்கிடத் தமிழ்ப்பணி

ஆற்றி மகிழ்ந்தேன் அங்கயற் கண்ணியோ
டமர்ந்த அழகன் ஆலவாய்ச் சொக்கன்
திருவருள் கூட்டிட, சிந்தை கனிந்திட,
கவிதை மலர்களைக் கல்விக் கரசி
கலைமகள் திருவடி களித்திட வைத்தேன்;

தமிழக அரசின் தகைசால் விருதினைப்
பெற்றுப் பெருமித முற்றேன் பேணிடும்
உற்றவென் பெற்றோர் ஈங்கிலை எனினும்

கற்றறி வாளர் களித்தனர் கண்டேன்;
முப்பத்து நான்கு செப்புமாண் டுகள்யான்

முடிவிலாத் தமிழ்ப்பணி படிதனில் முடித்தேன்;
ஒன்றொன் பதெட்டொன் றிலுரிய ஆகச்டில்-[1981]
கன்றினைப் பிரியாத் தாயெனப் பணிபுரி
யானும் பள்ளி வாழ்வில் ஓய்வினைக்
காணும் படிக்குக் கல்வித் துறையினர்

ஆணை இட்டனர் அடியனும் ஏற்றேன்;
ஆயினும் களித்தேன் அன்புறு நெஞ்சுடை
கல்வித் துறையினர் கருணைமீ கூர்ந்துஎன்
நல்ல பணியும் நடந்திட ஆணையும்
இட்டனர் கண்டு கட்டிளங் காளையாய்ப்

பணியும் தொடர்ந்தேன் பள்ளியாண் டளவுடன்
கண்ணுள் மணியாய்க் கலந்துடன் வாழ்ந்த
என்னுடல் பரவிய எந்தமிழ் மொழிக்கினி
என்றும் அடிமை யாவது திண்ணம்
திருவளர் தமிழகத் திருநகர் நிலத்திடை

என்னுடன் பணிபுரி இனிய ஆசிரியர்
தங்கக் குணமிகு பங்கமில் பெரியோர்
உற்றார் பெற்றோர் போன்றுரை பகர்ந்தோர்
மதிப்புரை அளிக்கும் மாணவ மணிகள்
யாரையும் மறவேன் தேறுக மனதில்

மறவா தெனைநீர் வாழ்த்துக வாழ்வேன்,
இனியான் செய்வதென் என்றெனை நினைக்கும்
இனியநற் குணத்தீர்! இயம்பு கின்றேன்;
மக்கட் செல்வ மாண்போ டெனைவளர்
திக்குறை தெய்வத் திருவருள் மறவேன்;

முருகனும் சிவனும் அருங்குணப் புலவரும்
கருதிய தமிழைக் கற்பதென் கடனாம்
ஆண்டுகள் பலவாய் அன்பா தரவாய்

ஏன்ற பணிபுரிந் தென்னுடன் மகிழ்ந்த
உங்களைப் பிரிவ தொன்றே எனக்குச்

சொல்லொணா இடராம் சோர்வும் அதுவாம்;
என்செய் வேன்யான் எனினும் ஓய்வுநாள்
என்னை அழைத்திட ஏகிடும் எனக்கு
வாழ்த்துக் கூறுவீர் வாழ்வும் அதுவே.

அன்பன்,

*பழ. த. சுப்பையன்.
விருது பெற்ற தேர்வுநிலைத் தமிழாசிரியர்,
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
குசிலியம்பாறை, மதுரை மாவட்டம்.

---

*கரந்தைப் புலவர் கல்லூரி முன்னாள் மாணவர்.

மொழி முதற்காரணமான ஒலி

சிலவகை அசைவுகள் செவிப்புலனைத் தாக்கும்போது உணரப்படுவதே ஒலியாகும். மொழியும் இவ்வாறு உணரப்படுவதே. மொழி என்பது பேசுவோரின் குரலில் பிறந்து பொருளுடைய அறிகுறிகளாக அமைந்து கேட்போரால் பொருள் உணரப்படும் ஒலிவகை எனலாம்; அது பெரும்பாலும் பேசுவோர் கேட்போர் ஆகிய இரு திறத்தார்க்கு இடையே நிகழ்ந்து, ஒருவர் உணர்ச்சியையோ கருத்தையோ மற்றவர் உணர்வதற்குப் பயன்படுகிறது. பேசுவோரின் மூளையில் ஓர் எண்ணம் எழுகிறது; கேட்போரின் மூளை அதை உணர்ந்து கொள்கிறது; பேசுவோர் கேட்போர் ஆகிய இருவர்க்கு இடையே—இருவரின் உடல் நரம்புகளுக்கு இடையே—மூளைகள் உறவு கொள்ளத்தக்க தொடர்பை ஏற்படுத்துவதே மொழிமுதற் காரணமான ஒலி.

—முனைவர் மு. வ.
மொழி நூல்.

கூர்மை ஆர்யக் கூட்டத்தைக்
குப்பை கூளப் புராணத்தைத்
தீர்ப்புரைக்கும் திறனாய்வால்
தெளியச் செய்தான் தமிழ்நிலமே''

பாவாணர் பாயிரம்:

இ. மு. சு. அவர்களின் பல்துறைப் பணிகளைத் தேவநேயப் பாவாணர் அவர்கள் தொகுத்துரைத்துக் கல்வெட்டு மெய்கீர்த்தியைப் போல ஆக்கியுள்ளார்,

'சங்கர நயினார் கோவிற் சான்றோன்
ஒப்பிலா இ. மு. சுப்பிர மணியன்
வேளாண் குடிநலம் விளங்கிய தமிழன்
ஐந்திறக் கணியன் அருங்கலை வல்லோன்
தமிழ மருத்துவம் தவலறத் தெரிந்தோன்
தமிழுக் கேதனைத் தத்தம் செய்தோன்
தமிழர் வாழ்வே தனதெனக் கொண்டோன்
தமிழ்த்தாய் மாதிகை தனைவெளி யிட்டும்
மறுபெயர் கொடுதமிழ் மானங் காத்தும்
கலைசொல் லாக்கம் கவினுறக் கண்டும்
ஆட்சிச் சொற்கள் அமைவுறத் தொகுத்தும்
அல்லும் பகலும் அரைநூற்றாண்டு மேல்
அரும்பாடு பட்டும் பெரும்பணி யாற்றியும்
பொருளில் புனைந்துரை புகலாமையாலும்
ஆர வார நீர்மை யிலாதும்
மாராய நெடுமொழி மருவாது சென்றோன்'

இ. மு சு
ஆற்றிய அருப்பணிகள்:

1) 1928 முதல் 1931 முடிய நாள்தோறும் தந்தை பெரியாரின் 'குடியரசு' ஏட்டில் எழுதிய சமுதாய எழுச்சிப் பணி.

2) 1934-இல் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ்மொழி வழிக் கல்வி ஏற்ற கலைச்சொற்களைத் தொகுத்து அந்நாள் முதலமைச்சர் சி. இராசகோபாலச்சாரி தலைமையில் வெளியிட்டது.

தமிழ்ப் பெரும் புலவர்

இ. மு. சுப்பிரமணிய பிள்ளை

அவர்களின்

★ வரலாறு பற்றிய அறிக்கை ★

புதுமைக் கவிஞர்,
பேராசிரியர், டாக்டர்,
இ. சு. முத்துசாமி
M. A, Ph. D., B. G. L, B. T.,
தமிழ்த்துறைத் தலைவர்,
சேதுபதி அரசு கலைக் கல்லூரி,
இராமநாதபுரம்.

38,
ஆதிசங்கர விநாயகர் கோவில்தெரு,
சங்கரன் கோவில்,
நெல்லை மாவட்டம்,
20—4—'82.

அன்புடையீர்,

வணக்கம்!

எம் தந்தையார் தமிழ்ப்பெரும் புலவர், கணியர், சித்த மருத்துவர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் (தோற்றம் 6—6—1896--மறைவு 24—3—1975) வரலாற்றை அன்னாரின் நண்பர் பத்தமடை S. அருணாசலம் பிள்ளை அவர்கள் 1943லும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் ''தமிழ்ப்புலவர் வரிசை'' யில் 1980லும் சுருங்கிய வடிவில் வெளியிட்டுள்ளனர். சமுதாயம், இலக்கியம். திறனாய்வு, சைவம், சொல்லாக்கம், சித்த மருத்துவம், வானியற் கணிதம் ஆகிய துறைகளில் இ. மு. சு. அவர்கள் ஆற்றிய அரைநூற்றாண்டுப் பணிகளைச் சிறிது விரிவாகத் தொகுத்துரைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளேன்.

பாவேந்தர் பாரதிதாசன்:

சைவ சித்தாந்தியாகவும், சீர்திருத்தவாதியாகவும் இ. மு. சு. அவர்கள் வாழ்ந்தமையைப் பாரதிதாசனார் புரிந்து பாராட்டியுள்ளார்.

''நேர்மை நீதி அஞ்சாமை
நிறைந்த பன்னூல் தேர்புலமை
சீர்மை கணிய நூலறிவு
சித்தாந்தத்தில் பேரறிவுக்

3) தமிழ் மட்டும் படித்தவர்கள் கல்லூரிக் கல்வியில் சேரும் வகையில் பேராசிரியர் சி. இலக்குவனாருடன் இணைந்து நெல்லை. ம. தி. தா. இந்துக் கல்லூரியின் மாலை வகுப்புக்கள் நடத்தியது.

4) தமிழாசிரியர்களுக்கு உயர்நிலைப் பள்ளிகளில் பிற ஆசிரியர்களுக்குச் சமமாகச் சம்பள விகிதம் கொடுக்க வேண்டுமென டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்களுடன் சேர்ந்து போராடியது.

5) தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்று பல அனைத்துக் கட்சி மாநாடுகள் நடத்தியது.

6) 1957-இல் தமிழில் ஆட்சி நடைபெற வசதியாக சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் மூலம் ஆட்சிச்சொல்லகராதி தொகுத்து அந்நாள் முதலமைச்சர் கு. காமராசர் தலைமையில் வெளிவிட்டது.

7) கல்வி ஆண்டின் நடுவில் ஓய்வு பெறும் ஆசிரியர்கள் கல்வி ஆண்டு முழுமையும் நீட்டிக்க வேண்டுமென அரசாணை பிறப்பிக்கச் செய்தது. நெல்லை மாவட்டத்தில் மூத்த தலைமுறை ஆசிரியர்கள் இதனை இ. மு. சு. G. O. என வழங்குவர்.

8) முன்னாள் முதலமைச்சர் மீ. பக்தவச்சலம் அவர்கள் ஆதரவில் திருவாசக உரை, மாவட்டக் கோவில் வரலாறுகள், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் வரலாறு எட்டு பகுதிகள் வெளியிட்டது

9) பேறிஞர் அண்ணா அரசேற்றதும் சித்த வைத்தியர் மாநாடுகள் நடத்திச் சித்த மருத்துவத் துறைக்குத் தனியாக இயக்குநர் போடும்படி செய்தது.

இ. மு. சு. அவர்களுடன் பழகியவர்கள், செய்திகள், நிகழ்ச்சிகள், கருத்துக்கள் போன்றவற்றை எனக்கு எழுதியனுப்புமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்.

நன்றி!

சங்கரன்கோவில்,
20—4—1982.

இ. சு. முத்துசாமி.

கரந்தைப் புலவர் கல்லூரி
இளங்கோவடிகள் தமிழ்க் கழகம்.
—: 43-ஆம் ஆண்டு நிறைவுவிழா. :—

நிகழும் திருவள்ளுவராண்டு *2013* மாசித் திங்கள் 15-ஆம் நாள் சனிக்கிழமை -27—2—1982- பிற்பகல் 4 மணியளவில், கரந்தைப் புலவர் கல்லூரியின் இளங்கோவடிகள் தமிழ்க் கழக 43-ஆம் ஆண்டு நிறைவு விழா. தமிழ்ச் சங்கப் பெருமன்றத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் மங்கலத் தொடக்கம் பெற்றது. மாணவர் தலைவர் திரு. செந்தில் குமார் (பி. லிட்., நான்காம் ஆண்டு) விழாவினைச் சிறப்பிக்க வந்திருந்த பெருந்தகைகளை வரவேற்று உரை நிகழ்த்திட, செல்வி கமலா (பி. லிட்., நான்காம் ஆண்டு) பல்வேறு கல்லூரிகள் நிகழ்த்திய பல போட்டிகளில் நம் கல்லூரி மாணவர் முதன்மை நிலைகளில் பரிசுகள் பெற்றமையைக் குறிப்பிடும் ஆண்டறிக்கையினைப் பெருமையுடன் அவைமுன் அளிக்க, விழா பொலிவுற்றது.

விழாத் தலைவர், நம் கல்லூரி முதல்வர் அவர்கள், ''விழாவில் சிறப்புரை யாற்றிட வந்த அறிஞர் பெருமக்களின் சீரார்ந்த சொற்பெருக்கு, கார்கால மழை கண்டு, தழைத்திடும் பயிர்களென, அவையோர் உள்ளத்தைத் தெளிவுறுத்தி, அறிவுப் பயிர் வளர்க்கத் துணை நிற்கும்'' என்று குறிப்பிட்டார்கள்.

''அரம்போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்
மக்கட் பண்பில் லாதவர்''

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க, தூய உள்ளம், தாயுள்ளம், அன்புள்ளம், தொண்டுள்ளம், கருணையுள்ளம், பேருள்ளம் கொண்டுள்ள அறிஞரையே, சமுதாயம் எதிர்நோக்கி யிருக்கின்றதுஎன்று அழகாகச் சுட்டிக் காட்டினார்கள்.

'பாரதி கண்ட கனவு' என்ற தலைப்பில் திருமிகு முனைவர் இரபிசிங் எம். ஏ., பிஎச். டி., அவர்கள், கனவின் பொதுமை இயல்புகளையும், பாரதி கண்ட கனவின் பொருளாழம் மிக்க சிறப்பியல்பினையும் கவினுற எடுத்தியம்பினார்கள்.

''உலக உயிர்களுக்குப் பசியுணர்வு அடிப்படையான ஒன்று. கனவோ பொதுமையானது'' என்றார்கள்.

''இலக்கியங்களிலும் கனவுக்கு ஒரு குறிப்பிட்ட இடம் உண்டு· பண்டைய கிரேக்க இலக்கியங்களிலும் நாம் காணலாம். ஆங்கில நாடகக் கவிஞன் சேக்சுபியரின் சூலியசு சீசர் -Julius Ceasar- எனும் நாடகத்தில், சீசர் கொலை செய்யப் படுவதற்கு முந்தைய இரவு, அவன் மனைவி கலிஃபோர்னியா, தீக்கனவு காணுகின்றாள். சிலம்பு, சிந்தாமணி போன்ற நமது தமிழ்க் காப்பியங்களிலும் கனவுக்குக் கனிசமான பங்குண்டு. பிளேட்டோ -Plato-, கனவை, ''அடிமன இச்சை'' என்பார். அவரது மாணவர், அரிசுடாட்டில் -Aristotle-. ''உடலோடு தொடர்பு உடையது'' என்று குறிப்பிடுவார். ''அடிமனத்தில் கட்டுண்ட இச்சைகளின் வெளிப்பாடு'' என்பது சிக்மண்டு ஃபிராய்டு Sigmund Freud-, என்பாரின் கணிப்பு. பொதுவாக ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் சமுதாய நிகழ்ச்சிகளின் விருப்பு வெறுப்புகளின் பாதிப்பு, தனிமனிதனைப் பாதிக்கும்போது உருவாகும் கற்பனையே கனவு' என விளக்குதல் ஓரளவு பொருந்தும்.

1.0 பாரதி, தானொரு கவிஞனாக வேண்டும் என்ற ஆர்வக்கனவு கொண்டவன்.

''... ... ... என்றன்
பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்''

என்று பராசக்தியை வேண்டுகின்றான்

1.1 அந்நிய ஆதிக்கக் கொடுமை கண்டு கொதித்து, அடிமைத் தனத்தை எண்ணி நொந்து புலம்பியவன். இந்நிலை மாறிட வேண்டும் என்று விடுதலைக் கனவில் துள்ளிக் குதிக்கின்றான்.

'ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமே' என்று எதிர்காலத்தைக் கடந்த காலமாக்குகின்றான். சமுதாயம் முன்னேற வேண்டுமெனில் நாடு விடுதலை பெற்றாக வேண்டும் என்ற தெளிவு அவனிடத்தில் உண்டு.

1.2. சாதியற்ற சமுதாயம் அவன் கண்ட இன்னொரு கனவு.

''பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே''

''பறையருக்கும் இங்குத் தீயர்
புலையருக்கும் விடுதலை''

என்ற பாடலடிகளில் அவனது கனவின்பெருமை புலப்படுகின்றது.

கனவுக்கும் நேரடி வாழ்க்கைச் சூழலுக்கும் பெரும் வேறுபாட்டினைக் காணும்போது, துடித்து எழுகின்றான். ஒரு சிறந்த கவிஞன், சமுதாயத்தைப் பாராட்டுவதைக் காட்டிலும், உண்மையான அவல நிலைகளைச் சாடுதல் வேண்டும். எனவே, இவன் தாலாட்டுப் பாடவில்லை. உறங்கும் சமுதாயத்தை விழிக்கச் செய்வதற்குப் 'பாஞ்சாலி சபதம்' படைத்தான். இன்று அவனது சமுதாயக் கனவுகள், சிதைந்து, சீர்கேடடைந்து, புரையோடிப் போயின. அவை செயல் வடிவம் பெற்றாக வேண்டும்.

''சுருங்கச் சொல்வது வள்ளுவனின் தந்திரம்;
சுருங்கிய நெஞ்சங்கள் விரியச்
'சுருக்'கென்று சொல்வது பாரதி மந்திரம்''

என்கின்றார் சிற்பி பாலசுப்பிரமணியம்

இவ்வாறாகப் பாரதியின் பாடல்கள் பலவற்றை மேற்கோள் காட்டி, ''இனியொரு விதிசெய்வோம்; அதை எந்த நாளும் காப்போம்'' என்ற உன்னதக் கவிஞன், தமிழர்களாகிய நம்மிடத்து ஒப்படைத்த பெரும் பொறுப்பினை ஏற்று, அவன் கண்ட கனவினை நனவாக்கிடல் வேண்டும் என்று, நமது முன்னுள்ள கடமையினைச் சுட்டிக் காட்டிச் சிந்தனையைத் தூண்டும் வகையில் சிறப்புரை யாற்றினார்கள்.

''சங்க இலக்கிய மாண்பு'' என்ற தலைப்பில் திருமிகு கோதண்ட ராமன் எம். ஏ., அவர்கள் உரையாற்றும்போது இலக்கியம் மனத்தைப் பண்படுத்தி வளப்படுத்தும் என்று கூறினார்கள் $'உணர்வில் வெளிவரும் கவிதை மனிதனை மனிதனாக்கும்.

பாஞ்சாலி சபதத்தில், துச்சாதனால் அவை முன் மானபங்கப் பட்ட பாஞ்சாலியைப் பாரதமாதாவாகக் கண்டு கொதித்த பாரதி,

''இது பொறுப்பதில்லை தம்பி!
எரிதழல் கொண்டுவா
கதிரை வைத்திழந்தான்–அண்ணன்
கையை எரித்திடுவோம்''

என்று எரிமலையாகக் குமுறுகின்றான்.

''துண்டு நிலாச் சோறாகத்
துளிவிண்மீன் கறியாகக்

$''The poetry is a spontaneous overflow of powerful feelings'' —Words worth.

கண்டு பசியாறக்
காலந்தான் என்றுவரும்''

என்று பாடும் நா. காமராசன் கவிதையில் அவலவுணர்வு ஏக்கம் விஞ்சி நிற்கின்றது.

''நெஞ்சத்தால் காதலவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து''

என்றும்,

''இம்மைமாறி மறுமையாயினும்
நீயாகியர் எங்கணவனை
யானாகியர் நின்னெஞ்சு நேர்பவளே''

என்றும் சங்கம் காட்டும் பெண்மையின் பெருஞ்சிறப்புக்களை யெல்லாம் தமக்கேயுரிய நகைச்சுவையோடு அனைவரும் சுவைக்கும் வண்ணம் குறிப்பிட்டார்கள்.

'அறிவியல் வளர்ச்சியில் தமிழாசிரியர் பங்கு' என்ற தலைப்பில் திருமிகு ச. சம்பத்து எம் எஃசி., அவர்கள், அறிவார்ந்த சொற்பெருக்கினை நிகழ்த்தினார்கள். சங்க இலக்கியப் புலவர்கள் தத்தமது சீரிய படைப்புகளில் இயற்கைக்கு, வானியல் அறிவுக்கு, சிறப்பானதொரு இடம் கொடுத்திருக்கிறார்கள். 'கவிதை உணர்விலும் வானியல் அறிவு கலந்திருந்த அந்த உன்னதமான காலங்களை இன்று எண்ணுகின்றபோது,'அறிவியலில் தமிழனைப் போலத் தலை சிறந்தவன் எங்காவது நானிலத்தில் உண்டா? என்று கேட்கத் தோன்றுகிறது.

''வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
திசை திரிந்து தெற்கு ஏகினும்,
தற்பாடிய தளி உணவின்
புள் தேம்பப் புயல் மாறி,
வான் பொய்ப்பினும்'' —பட்டினப்பாலை

''விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய
உரோகிணி'' —நெடுநல்வாடை

''விரிகதிர் மதியமொடு, வியல்விசும்பு, புணர்ப்ப
எரிசடை எழில்வேழம் தலையெனக் கீழிருந்து
தெருவிடைப் படுத்த மூன்றுஒன்பதிற்று இருக்கையுள்
உருகெழு வெள்ளிவந்து ஏற்றியல் சேர

வருடையைப் படிமகன் வாய்ப்ப, போருந்தெரி
புந்தி மிதுனம் பொருந்த, புலர்விடியல்
அங்கு உயர்நிற்ப, அந்நணன் பங்குலின்
இல்லத்துணைக்கு உப்பால் எய்த இறையமன்
வில்லின் கடை மகரம் மேவ, பாம்பு ஒல்லை
மதிாம் மறைய வருநாளில் வாய்ந்த
பொதியில் முனைவன் புரைவரைக் கீறி
மிதுனம் அடைய, விரிகதிர் வேனில்
எதிர்வரவு மாரிஇயைக எனஇவ் வாற்றால்
புரைகெழு சையம் பொதிமழை தாழ.
நெரிதரூஉம் வையைப் புனல்'' —வையை:பரிபாடல்-11.

போன்ற பாடலடிகளைக் குறிப்பிட்டு, காட்சி விளக்கத்துக்கும் அறிவியல் வளர்ச்சியையே குறிப்பிடும் சங்கப் புலவனின் திறத்தினைப் போற்றினார்கள். காலப் போக்கில், மனித சிந்தனைகனின் மாறுபாடுகளை ஒட்டி எழுகிள்ற இலக்கியங்கள், அறிவியலோடு இயைந்த வாழ்வியலினின்றும் தடம்புரண்டு, இடைக்காலத்தில் செல்வர்களைத் துதிபாடும் இழிநிலைக்கு இறங்கிப் போயிற்று'. இத்தாங்கெட்ட நிலைக்குத் தாழ்ந்து விட்டமைக்கு வருந்தி, ''தமிழைப் பயின்றவர்கள், தமிழைப் பயிற்றுவிக்கின்றவர்கள், தமிழால் வாழுகின்றவர்கள் — இன்று வரை தமிழுக்குச் சாதித்த தென்ன?'' என்று சாடினார்கள். அறிவியல் கண்டுபிடிப்புகளைத் தமிழுக்கு ஆக்குவதன் இன்றியமையாமையினை வலியுறுத்தினார்கள். இன்றைய சீர்கேடுகளைக் களைந்து தமிழுக்கு ஏற்றதொரு ஏற்றமளித்திடச் சில தீர்வுகளையும் அவை முன் வைத்தார்கள்.

1) தமிழ் இலக்கியச் சொற்களைத் தொகுத்து, வழக்கில் இருக்கும் கலைச் சொற்களின் எண்ணிக்கையை மிகுதிப் படுத்தலாம்.

2) அறிவியல் அறிஞரது கண்டு பிடிப்புகளையும், ஆய்வு நெறி முறைகளையும். அன்னாரது வரலாறுகளையும், ஆங்கில மொழி பயிலும் மாணவர்களுக்குப் பயிற்றுவிப்பதுபோல, தமிழ் மாணவர்களுக்கும், தமிழ் மொழி வாயிலாக அறிவியல் துறையினை அறிமுகப் படுத்தலாம். இதன் விளைவாக, நமது தமிழ் மொழியில் கலைச் சொற்கள் மிகுதியாகும்; அறிவியல் சிந்தனைகளைத் தமிழிலேயே சிந்திக்கும் திறம் வளரும்; தமிழ் மேலும் வளம் பெறும்; எந்தச் செய்திபினையும், பிறருக்கு எளிதில் விளக்கும் எளிமையையும் தமிழ் பெற்றுச் சிறக்கும்.

3) நூலகங்களில் அறிவியல் தொடர்பான நூல்களுக்கு உரிய இடம் அளிக்கப்பட வேண்டும்.

என்ற மூன்று ஆலோசனைக் கருத்துக்களை எடுத்தியம்பி, சிந்தனைக்கு வித்திட்டார்கள். கொடுக்கப்பட்ட ஐய வினாக்களுக்குத் தீர்வுகளும் கூறினார்கள்.

கல்லூரியில் நிகழ்வுற்ற பல்வேறு போட்டிகளில், இவ்வாண்டு கலந்து கொண்டு பரிசு பெற்றவர்களுக்கும், மாவட்ட அளவில் நிகழ்ந்த போட்டியில் தகுதி பெற்றோருக்கும், சிறப்பு விருந்தினர் பரிசளித்துச் சிறப்பித்தனர்.

பின்னர் மாணவர் செயலர் திரு. மோ. அந்தோணிராசு நன்றி கூற, நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே முடிவுற்றது.

———(o)———

இலக்கிய இலக்கண
வினா விடை

1) வினா:— 'இலஞ்சியம்' என்பது மகளிர் பெயராகவும், நாட்டுப் பாடலில் குழவிப் பெயராகவும் வழங்குகிறது. விளக்கம் என்ன?

[இரா. சேரலாதன், கரந்தை.]

விடை:– இலஞ்சியம் என்பது தாமரைக் குளத்திற்குரிய பெயர். இலஞ்சி = தாமரை: அம் = நீர் (குளம்) இலஞ்சி என்பது திருமகள் உறையும் இடம் என்னும் கருத்தால் தாமரையைக் குறிக்கும். [இல்லம் + சீ] சீ (ஸ்ரீ) இலக்குமியைக் குறிக்கும் சொல். அதனான் மகளிர்க்கு இலஞ்சி எனப் பெயரிடும் வழக்குத் தோன்றிற்று. தாமரை—பங்கசம்—கமலம் என்பவை அப்பொருளால் பெண்களுக்குப் பெயராயின இச்சொல் (இலஞ்சி) அம்மாள் என்னும் துணைச் சொல்லோடு கூடி இலஞ்சியம்மாள் என வரும். இலஞ்சியம்மாள் என்ற பெயரைப் பிறழ் பிரிப்பாகப் (இலஞ்சியம் +

ஆள்) பிரித்து இலஞ்சியம் என்பதே மகளிர்க்குப் பெயர் எனக் கொண்டு விட்டனர்.

இச்சொற்பொருளுக்கும் குழந்தைக்கும் எந்த இயைபும் இல்லை. குழந்தையைக் குறிக்கும் இலஞ்சியம் என்பது இளஞ்சிங்கம் என்னும் பொருளில் வரும். இளஞ்சீயம் என்னும் சொல்லின் சேரி வழக்கு கந்தரலங்காரத்தில் இச்சொல் ''இளஞ்சியமே!'' எனக் குறுக்கல் விகாரம் பெற்று வந்துள்ளமையால் இது புலனாகும்.

விடை எழுதியவர் புலவர் ச. பாலசுந்தரனார்.

2) வினா:— சித்திரை, வைகாசி முதலிய திங்கட் பெயர்களைக் குறிக்கும் சொற்கள் தமிழ்ச் சொற்களா? தொல்காப்பியர் காலத்தில் இவை வழங்கினவா? தனித்தமிழ் இயக்க நண்பர்கள், மேழம் விடை எனக் கூறுகின்றமையால் அவை வட சொற்களா?

[இரா. சேரலாதன், கரந்தை]

சித்திரை—வைகாசி என்பவை தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்து வழங்கி வரும் செந்தமிழ்ச் சொற்களேயாம். மேழம், விடை என்பவை இராசிப் பெயர்களின் தமிழ் மொழித் தற்பவமும் மொழி பெயர்ப்புமாகும். சித்திரை வைகாசி என்பவை ஆகுபெயர் அடிப்படையில் ஒரு திங்கள் வட்டத்தைக் குறிப்பனவாகும்.

பாரத நாடு முழுதும் தமிழே (திராவிடம்) வழங்கி வந்த காலை நடு ஆசியாவினின்றும் வந்து சிந்துநதிச் சமவெளியிற் குடியேறிய ஆரியர் முரண் நீங்கித் தமிழரோடு உறவு புரிந்து வளர்ந்த காலை வட்டார வழக்கில் சிறுசிறு வேறுபாட்டோடு வழங்கிய தமிழ் (பிராகிருதம்) மொழியை ஆரிய எழுத்தொலிப் பலுக்குதற்கு ஏற்ப அமைத்துக் கொண்டு சமயம், வானியல், வேள்வி, தத்துவம் முதலிய உயரிய கலைகளை அப்பிராகிருத மொழியில் வழங்கி வந்தனர்.

பின்னர் அதனினின்று செம்மை செய்து கொள்ளப்பட்டதே சமற்கிருதம் என்னும் வடமொழி. சமற்கிருதத்தில் திராவிடச் சொற்களின் மூலங்கள் எழுபத்தைந்து விழுக்காடுகளுக்கும் மேல் உள்ளன. (ஆரியச் சொற்கள் மிகக் குறைந்த அளவே உள.)

சமயக் கலப்பால் ஏற்பட்ட ஆரிய திராவிட உறவு மிக வளர்ந்தகாலை பாரதநாடு முழுமைக்கும் சமயம், வானியல், தத்துவக் கலைக்குரிய சொற்களை ஒரே முறைபில் அமைத்துக் கொண்டனர். அவற்றை வட்டார வழக்கிற்கு ஏற்பப் பலுக்கவும் எழுதவும் செய்தனர்.

அம்மரபினால் கோளியற் கணிதமும் அக்கலைச் சொற்களும் தென்னகத்தில் தமிழ் மொழியில் அமைந்துள்ளன.

ஆதலின் தொல்காப்பியம் திங்கட் பெயர்களையும் நாண் மீனின் பெயர்களையும் அப்படியே ஏற்று இலக்கணம் கூறு கின்றது. இப்பெயர்கள் பாரத நாட்டில் உள்ள எல்லா மொழிகளிலும் சிறுசிறு வேறுபாட்டோடு வழங்குகின்றன. இவை ஆரியத்திற்குரியவை அல்ல என்பதை மேலையாரிய மொழித் திங்கட் பெயர் நாண்மீன் பெயர்களோடு ஒப்பிட்டு நோக்கி உணரலாம்.

ஓர் இராசி வட்டத்தின்கண் முழுமதி நிலவும்காலை எந்த நாள் மீனின் ஆட்சி நிகழ்கின்றதோ அந் நாள் மீனின் பெயர் அத்திங்களுக்கு ஆகி அத்திங்களின் ஒரு சுழல் வட்டக் காலத்தைக் குறிப்பதே இப்பெயர்களின் பொருள். மேழம் (மேஷம்), விடை (ரிஷபம்) முதலியவை இராசியின் பெயர்களாதலின் அவை ஆகுபெயரான் கதிரவனைக் குறிப்பதே முறையாகும்.

எனவே சித்திரை முதலாய திங்கட் பெயர்களையும் அசுவினி முதலாய நாட்பெயர்களையும் அமைத்துக் கொண்ட செந் தமிழ்ச் சொல் என ஏற்றல் வேண்டும்.
விடை எழுதியவர்: பேராசிரியர் ச. பாலசுந்தரம்.

———:(o):———

தனித்தமிழ்....திங்கட் பெயர்

சித்திரை முதல் பங்குனி ஈறாகத் தனித்தமிழ் இயக்க அன்பர்கள் எடுத்தாளும் திங்கட் பெயர்கள்.

மேழம், விடை, இரட்டை, கடகம், மடங்கல், கன்னி, துலை, நளி, சிலை, சுறவம், கும்பம், மீனம்.

பதிப்பாசிரியர் குழு:

1. திரு. **எஸ். நடராசன்,** எம். எல். ஏ.,
தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

2. திரு. புலவர் **க. வெள்ளைவாரணனார்,**
பேராசிரியர்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

3. திரு. புலவர் **பி. விருத்தாசலம்,** எம். ஏ.
முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

4. திரு. புலவர் **ச. பாலசுந்தரம்,**
துணை முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

5. திரு. புலவர் **சி. கோவிந்தராசன்,**
பேராசிரியர் (ஓய்வு)
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

6. திரு. புலவர் **மீனா. இராமதாசன்,** எம். ஏ.,
முதனிலைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரனார் மேனிலைப் பள்ளி,
கரந்தை, தஞ்சாவூர்.

7. திரு. **அரங்க வே. சுப்பிரமணியன்,** பி. ஏ.,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்;
பொழிற்றொண்டர்.

Regd No. TN/TJ/17.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

		உள் நாடு	வெளிநாடு
1.	ஆண்டு வரி	... 20-00	... 030—00
2.	தனி இதழ்	... 02—00	
3.	ஆயுள் வரி	... 250—00	... 250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	... 000—25
ஆண்டு வரி	... 003—00
ஆயுள் வரி	... 100—00

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

நெல்லை வருக்கைக் கோவை	0—12
சித்தரந்தாதி	0—12
சுருதி வீணை	0—25
பரத சாத்திரம்	1—50
கவியரசு நினைவுமலர்	1—00
சிவமும் செந்தமிழும்	0—25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம் —(பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தொல்—பொதுப்பாயிர உரை	0—12
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ் நூல் —சுவாமி விபுலானந்தர்	50—00
கட்டுரைப் பொழில் (மணிவிழா மலர்)	30—00
மெய்ஞ்ஞானத்தின் — கொழுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
நக்கீரர் — ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4—00

ஆசிரியரும் வெளியிடுபவரும்: திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. எ.,
கரந்தைத் தமிழ்ச்சங்கம் கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர்: திருமதி S. நிர்மலா,
அன்னை அச்சகம், 1734, காந்தி சாலை, தஞ்சாவூர்-613 002.